தரம் 5 - 11 வரை

எண்: 05 எழுத்து: 02 பெப்ரவரி 2011

# AHARAM
# அகரம்

## இலங்கையின் சுதந்திர தினம்

## தூதரின் வாழ்வில்...


## லா நினோவும் காலநிலை மாற்றமும்

30/-

மாதாந்த மாணவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்து விட்டது...




ஆஸிம் அலவி எழுதிய

## எமது எழுச்சியின் எதிர்காலம்

விலை 150.00

**கிடைக்குமிடங்கள்:**

அல்ஹஸனாத் அலுவலகம்
77, தெமடகொட வீதி, கொழும்பு 09.


இக்ரஃ புத்தக நிலையம்
79, தெமடகொட வீதி,
கொழும்பு 09.

இஸ்லாமிக் புக் ஹவ்ஸ்
77, தெமடகொட வீதி, கொழும்பு 09.


கொலேஜ் புக் ஹவ்ஸ்
மாவனல்லை

தொகையாகப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 077 6984202 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## எமது வெளியீடுகளை வாசியுங்கள்...




120.00




110.00




110.00

## முழுக் குடும்பமும் பயன்பெறுங்கள்!

அல்ஹஸனாத் வெளியீட்டகம்
77, தெமடகொட வீதி, கொழும்பு 00900 தொலைபேசி 0112689324


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்

எண்: 05 பெப்ரவரி 2011 எழுத்து: 02




**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்
**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.சீ. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)
எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)
ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)
**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)
**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம்
**பக்க வடிவமைப்பு**
ஏ.ஏ. முஹம்மத் பவாஸ்

**சந்தா விபரம்**
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-

**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: aharamipc@gmail.com

## உள்ளே...







........... 14




........... 16

32




தூதரின் வாழ்வில் பாடங்களும் படிப்பினைகளும் 20

38







22

கவிஞர் அஹ்மத் ஷவ்கி 28




10




40

### பாடத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 36 | தமிழ் | 34 |
| வரலாறு | 30 | விஞ்ஞானம் | 26 |

புலமைப் பரிசில் 41



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல்: எதை? எவ்வாறு?

அறிவு வெடித்துச் சிதறும் யுகமொன்றில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். திரும்பும் திசையெங்கும் கற்கை நெறிகளும் கல்வி நிறுவனங்களும் கையசைத்து அழைத்துக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைக ளிலும் சஞ்சிகைகளிலும் விளம்பரப் பக்கங்களை இவையே கவ்விப் பிடித்திருக்கின்றன.

கற்றுக்கொள்ள வேண்டும் என விரும்புகின்ற அனைவரும், குறிப்பாக மாணவர்கள் தட்டுத் தடுமாறுகிறார்கள். பெற்றோரும் கூட இந்த அலையில் தீர்மானமெடுக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள்.

எதைக் கற்றுக் கொள்வது? எவ்வாறு கற்பது? எதனை முன்னுரிமைப்படுத் துவது? எதனை பிற்படுத்துவது? போன்றவற்றை நுணுக்கமாக விளங்கிக் கொள்ளாமல் தீர்மானங்கள் மேற்கொள்வது ஆபத்தாகும். பலர் நேரம், பணம் என்பவற்றை செலவு செய்ததுதான் மீதம் என்ற நிலை இருப்பதைக் காண முடியுமாக உள்ளது. இது தொடர்பில் நாம் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.

இன்றைய உலகம் "வேகமான உலகம்" மட்டுமல்ல "வேகமும் விவேகமு முள்ள உலகமாகும்." இந்நிலையில் கற்றல் தொடர்பான வழிகாட்டல்களைப் பெறுவதில் நாம் கவனம் செலுத்தத் தவறுவது நாமே நம்மை பின் தள்ளுவதற்கு சமனாகும். இச் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு அகரம் இது தொடர்பான வழிகாட்டல்களை தொடர்ந்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வழிகாட்டல்களுக்கும் அப்பால் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு ஏற்பாடுகள், வழிகாட்டல்கள், ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், மாணவர் நலன்புரி அமைப்புகள் என்பன முன்னின்று இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். உண்மையில், மாணவர்களுக்கான "கல்வி வழிகாட்டல்" நிகழ்ச் சித் திட்டத்தை இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்கம் தொடர்ந்தும் தேவை உணர்ந்து வேண்டுகோள் விடுக்கும் பாடசாலைகளில் நடத்தி வருவதை நன்றியோடு நினைவுகூர்கிறோம்.

எனவே, இதுபோன்ற அமைப்புக்களை தொடர்பு கொள்வதன் அல்லது இத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களை தொடர்பு கொள்வதன் ஊடாக மாணவர்களுக்கு கற்றல் வழிகாட்டல்களை வழங்குவதில் பாடசாலை, பாடசாலை சார் நிறுவனங்கள், பெற்றோர் கவனம் செலுத்துவது இன்றியமையாத ஒன்று என்பதை மீட்டி மீட்டிக் குறிப்பிட விரும்புகிறோம்.

"செயலாற்றுவோர் முன்னேறுகின்றனர். ஒரு கணப்பொழுதேனும் ஓய்பவர்கள் சதாவும் சுழன்று கொண்டே இருக்கும் காலச் சக்கரத்தில் சிக்கி நசுக்குண்டு அழிந்து விடுகின்றனர்" என்ற இறையருட் கவி அல்லாமா இக்பாலின் வார்த்தைகள் வாழ்க்கையில் பிரதிபலிக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினைக்கு ஓர் உண்மைச் சம்பவம்

# ஹில்ஃபுல் ஃபுழூல் ஒப்பந்தம்

ஜாஹிலிய்யக் காலத்தில் ஒருநாள் ஜுபைத் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் தனது வணிகப் பொருட்களுடன் மக்கா வந்தார். அவரிடமிருந்து ஸமாவைச் சேர்ந்த ஆஸ் இப்னு வாயில் என்பவர் பொருட்களை வாங்கிக் கொண்டு அதற்கான விலையைக் கொடுக்க மறுத்து விட்டார். பொருட்களைப் பறிகொடுத்தவர் தனது நேசக் கோத்திரங்களாகிய அப்துத் தார், மக்ஸூம், ஸஹ்ம் ஆகியோரிடம் சென்று உதவி கேட்டபோது எவரும் அவரது கோரிக்கையை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வில்லை. உடனே அவர் அபூ குபைஸ் மலையில் ஏறி தனக்கிழைக்கப்பட்ட அநீதத்தை உரத்த குரலில் கவிதையாகப் பாடினார். அதைக் கேட்ட ஸுபைர் இப்னு அப்துல் முத்தலிப், ஏன் இவ்வாறு இவர் கைவிடப்பட்டார் என வினவினார்.

பின் குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்த ஹாஷிம், முத்தலிப், அஸத் இப்னு அப்துல் உஸ்ஸா, ஜுஹ்ரா இப்னு கிலாப், தைம் இப்னு முர்ரா ஆகிய குடும்பத்தார் அனைவரும் இணைந்து அப்துல்லாஹ் இப்னு ஜத்ஆன் அத்தைமீ அவர்களின் வீட்டில் ஒன்று கூடினர். காரணம் அவர் வயது முதிர்ந்தவராகவும் மதிப்பு மிக்கவராகவும் இருந்தமையாகும். அங்கு அவர்கள் பின்வரும் உடன்படிக்கையைச் செய்தனர்:

“மக்காவாசிகளாயினும் வெளியூர்வாசிகளாயினும் அவர்களில் எவருக்கேனும் அநீதி இழைக்கப்பட்டால் அவருக்கு முழுமையாக உதவி செய்து நீதி கிடைக்கச் செய்வதில் அனைவரும் இணைந்து முயற்சிக்க வேண்டும்.”

அதன் பின் அனைவரும் ஆஸ் இப்னு வாயிலிடமிருந்து பாதிக்கப்பட்டவருக்கு அவரது உரிமையை பெற்று கொடுத்தனர். இவ்வுடன்படிக்கையில் நபி (ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் கலந்து கொண்டார்கள்.

> “அப்துல்லாஹ் இப்னு ஜத்ஆன் வீட்டில் நடந்த ஒப்பந்தத்தில் நான் கலந்து கொண்டேன். எனக்கு செந்நிற ஒட்டகைகள் கிடைப்பதை விட அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இஸ்லாத்தின் வருகைக்குப் பின்பும் எனக்கு (அதுபோன்ற) ஒப்பந்தத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டால் அதை நான் ஒப்புக் கொள்வேன்.”


இவ்வுடன்படிக்கையில் கலந்து கொண்டது பற்றி நபித்துவம் கிடைத்ததற்குப் பின் நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:


“அப்துல்லாஹ் இப்னு ஜத்ஆன் வீட்டில் நடந்த ஒப்பந்தத்தில் நான் கலந்து கொண்டேன். எனக்கு செந்நிற ஒட்டகைகள் கிடைப்பதைவிட அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இஸ்லாத்தின் வருகைக்குப் பின்பும் எனக்கு (அதுபோன்ற) ஒப்பந்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதை நான் ஒப்புக் கொள்வேன்.”

இந்த உடன்படிக்கை அறியாமைக் காலத்தில் இனவெறியினால் ஏற்பட்ட அநீதங்களை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டிருந்தது.

‘ஹில்ஃபுல் ஃபுழூல்’ என்பது ஜாஹிலிய்யக் காலத்தில் உருவாக்கப்பட்ட மனிதநலன் பணிகளுக்கான அமைப்பாகும். இவ்வொப்பந்தம் சங்கைமிக்க மாதமான துல்கஃதாவில் நடைபெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லலமுல்ல ஆலிப் அலி (இஸ்லாஹிய்யா வளாகம்)
www.aliaalif.tk



# குளிர் நிலவு (MOON)

***"சந்திரன் மீது சத்தியமாக"*** என்று அல்லாஹ் அல்குர்ஆனின் 91ஆம் அத்தியாயத்தில் இரண்டாம் வசனத்தில் குறிப்பிடுகிறான். சந்திரனை வெறும் பார்வைப் பொருளாகக் கருதி அலட்சியப்படுத்திவிடாதிருக்க அல்லாஹ் அதன் மீது சத்தியம் செய்து அதன்பால் எமது கவனத்தைக் குவிக்கிறான்.

பூமியின் உபகோளே சந்திரன் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பூமி சூரியனைச் சுற்றி வலம் வருவது போன்றே சந்திரனும் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு பூமியையும் சுற்றி வலம் வருகிறது. பூமியை முழுமையாகச் சுற்றி முடிப்பதற்கு சந்தினுக்கு 27 1/3 நாட்கள் செல்கின்றன. இதனை மையமாக வைத்துத்தான் நாம் மாதங்களையும் வருடங்களையும் கணக்கிடுகிறோம். இது அல்லாஹ் மனிதனுக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஓர் அருட்கொடையாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

"இன்னும் வருடங்களின் எண்ணிக்கையையும் (மாதங்களின்) கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக (சந்திரனாகிய) அதற்கு அவன் பல தங்குமிடங்களை ஏற்படுத்தினான். உண்மையைக் கொண்டே அல்லாஹ் இவற்றைப் படைத்துள்ளான். விளங்கக்கூடியவர்களுக்கு இதிலே சான்றுகளை அவன் விவரிக்கின்றான்" (10:05)

பௌர்ணமி இரவில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் வெண்மதியைச் சற்று நேரம் உற்றுப் பாருங்கள். நீங்கள் அறியாமலேயே உங்கள் உள்ளம் சிலிர்த்து நாவு சுப்ஹானல்லாஹ் சொல்வதை உணர்வீர்கள். அப்படியோர் அழகையும் மனதிற்கு இதத்தையும் இறை அத்தாட்சியையும் அல்லாஹ் நிலவில் வைத்துள்ளான். இதனால்தான் கவிதைகளிலும் பாடல்களிலும் கூட நிலா முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது.

சந்திரன் வெளிப்படுத்தும் ஒளி உண்மையிலேயே அதனுடையதல்ல. சூரியனிடமிருந்து பெறும் ஒளியையே சந்திரன் தெறிப்படையச் செய்து பிரதிபலிக்கிறது. அடிப்படையில் சந்திரன் ஓர் ஒளிராப் பொருளாகும். இவ்வுண்மை 18 ஆம் நுற்றாண்டில்தான் கண்டறியப்பட்டது. ஆனால் அல்குர்ஆன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இவ்வுண்மையை தெளிவாகக் கூறிவிட்டது.

"அவற்றில் சந்திரனை ஒளியாகவும் சூரியனை விளக்காகவும் அமைத்தான்." (71:16) (10:05) (25:61)

இது தொடர்பாக வரும் வசனங்களில் சூரியனின் ஒளியைக் குறிக்க 'ழியாஉன்', 'சிராஜுன்' என்ற பதங்களும் சந்திரனைக் குறிக்க 'நூருன்' என்ற பதமும் அல்குர்ஆனிலே பயன்படுத்தப்பட்டுள்ளது. 'ழியாஉன்' என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுய ஒளியை உடையது' எனவும் 'சிராஜுன்' என்றால் 'ஒளியைப் பெற்றுப் பிரகாசிக்கக்கூடியது' எனவும் பொருள்படும். அல்குர்ஆனின் மொழியற்புதத்திற்கு இதுவும் ஒரு சான்று.

சந்திரன் தனது நீள்வட்டப் பாதையில் சுற்றி புவியினருகே வரும்போது பூமியிலிருந்து சந்திரனுக்கான தூரம் 356,395கி.மீ உம் பூமியை விட்டு அது தூரச் செல்லும்போது 406,767கி.மீ இடைத் தூரத்தையும் கொண்டிருக்கும். சந்திரனின் விட்டம் 3480 கி.மீ ஆகும். சந்திரனில் உள்ள ஒரு பொருளின் திணிவானது பூமியிலுள்ள ஒரு பொருளின் திணிவின் 1/6 பங்காகும். அதாவது பூமியில் 60கி.கி திணிவுள்ள நீங்கள் சந்திரனுக்குச் சென்றால் உங்களது திணிவு 10கி.கி ஆக இருக்கும். இதற்குக் காரணம் பூமியை விடவும் சந்திரனின் புவியீர்ப்பு விசை குறைவாயிருப்பதாகும்.

ஈர்ப்பு விசை குறையும் சந்தர்ப்பத்தில் மனிதனால் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. விண்வெளி ஆராய்ச்சிக்காகச் செல்லும் விண்வெளி ஆய்வாளர்கள் இதனால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஓரிடத்தில் சரியாக நிற்க முடியாது, நடக்க இயலாது, உடலில் இரத்தவோட்ட வேகம் குறைவடைகின்றது. இதனால் இதயத் துடிப்பு குறைவடைவதோடு இதயம் ஒருவகை இறுக்கமான நிலையையும் அடைகின்றது. இதயம் இறுக்கமாகும் இவ்வனுபவத்தை சிலபோது விமானங்களில் பிரயாணிப்பவர்களால் கூட பெற முடியும். விமானத்தைக் கூட எண்ணிப் பார்க்காத அந்த 14ஆம் நூற்றாண்டில் திருமறை கூறியிருக்கும் அற்புதத்தைப் பாருங்கள்.

"அல்லாஹ் எவருக்கு நேர்வழிகாட்ட நாடுகிறானோ அவரது இதயத்தை இஸ்லாத்தின்பால் விரிவாக்குகின்றான். இன்னும் எவரை வழிகேட்டிலேயே விட்டுவிட நாடுகின்றானோ அவருடைய இதயத்தை அவர் விண்ணில் ஏறுபவரைப் போன்று நெருக்கடியானதாக மிகக் கஷ்டமடைந்ததாக ஆக்கி விடுகிறான்." (6:125)

அல்குர்ஆன் சந்திரனின் நேர்த்தியான ஓடுபாதை பற்றி பின்வருமாறு கூறுகிறது:

"இன்னும் அவன்தான் இரவையும் பகலையும் சூரியனையும் சந்திரனையும் படைத்தான். அவை ஒவ்வொன்றும் தமக்குரிய மண்டலங்களில் நீந்திச் செல்கின்றன." (21:33)

பிறிதோர் இடத்தில்,

"சந்திரனை (உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்ச மட்டையைப் போன்று அது மீண்டும் வரும் வரையில் பல தங்குமிடங்களை ஏற்படுத்தியிருக் கிறோம்." (36:39)


சந்திரன் அல்லாஹ்வின் திட்டப்படி தனது ஒழுங்கிலிருந்து சற்றும் பிசகாது தன்னைத்தானே சுற்றிக் கொண்டு நீள்வட்டப் பாதையில் பூமியையும் சுற்றிச் செல்கின்றது. பிற கோள்களின் ஓடுபாதையை விட சந்திரனின் பாதை வித்தியாசமானதாகும். பூமியினதும் சந்திரனதும் சுழற்சி மற்றும் சுற்றுகை என்பன காரணமாக சந்திரன் சில நாட்கள் பூமிக்கு முன்னாலும் சில நாட்கள் பூமிக்குப் பின்னாலும் 'T' வடிவத்தை ஒத்த பாதையில் பயணிக்கின்றது. இவ்வடிவம் காய்ந்து உலர்ந்த பேரீச்ச மட்டையை ஒத்திருப்பதனால் தான் அல்லாஹ் இவ்வசனத்தில் 'பேரீச்ச மட்டை' என்று பிரயோகித்திருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அத்தோடு, புவியில் உயிர் வாழ்க்கை சீராக இருப்பதற்கு சந்திரனின் பங்கு மிக முக்கியமானது. சந்திரனின் இயக்கம் காரணமாக கடலில் கொந்தளிப்புகளும் அலைகளின் வீச்சும் நிகழ்கின்றன. இதுவே 'வற்றுப்பெருக்கு' எனப்படுகிறது. சில இடங்களில் இதன் காரணமாக கடல் அலைகள் 60 அடி வரை உயர்வதும் உண்டு. தற்போதிருப்பதைவிட பூமிக்கும் சந்திரனுக்குமிடையிலான தூரம் குறைந்தாலோ அல்லது கூடினாலோ பாரிய அழிவுகள்தான் நேரும். இவற்றிலிருந்தும் பாதுகாப்பான முறையில்தான் அல்லாஹ் மிகப் பொருத்தமான இடத்தில் சந்திரனை பூமியிலிருந்து உரிய அளவு தூரமாக வைத்துள்ளான்.

பிற கோள்களைவிட சந்திரனை நாம் இரவு வானில் தெளிவாகக் காண முடியுமான போதிலும் உலகில் யாரும் இதுவரை நேரடியாகக் காணாத ஒரு பக்கமும் சந்திரனுக்கு உண்டு. எப்போதும் சந்திரனின் ஒரே முகப் பக்கமே இரவு நேரங்களில் பூமியை நோக்கியிருக்கின்றது. புவிச் சுழற்சி மற்றும் சுற்றுகையினாலும் சந்திரனின் சுழற்சி மற்றும் சுற்றுகை என்பவற்றாலும் சந்திரனின் மறுபக்கத்தை எம்மால் நேரடியாகக் காண முடியாதுள்ளது. 1959ஆம் ஆண்டில் ரஷ்யாவின் 'லூனா' என்ற விண்கலமே முதன் முதலில் சந்திரனின் மறுபக்கத்தைப் படமெடுத்து எம்மாலும் அதனைப் பார்க்கக்கூடிய விதத்தில் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'லூனா' விண்கலம் படமெடுத்த சந்திரனின் மறுபக்கம்

அல்லாஹ் சந்திரன் உட்பட அனைத்துமே குறிப்பிட்டதொரு தவணை வரை செல்வதாகக் குறிப்பிடுகிறான்.

"சூரியனையும், சந்திரனையும் (அல்லாஹ்) வசப்படுத்தி வைத்திருக்கிறான். (இவை) ஒவ்வொன்றும் (அவற்றுக்கென) குறிப்பிட்ட தவணைப்படியே செல்கின்றன." (35:13)(39:5)

சந்திரனின் தவணை எது என்பதை விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது. சந்திரனானது ஒவ்வொரு வருடமும் 3செ.மீ அளவு தூரம் பூமியை விட்டும் தூரம் செல்வதாக நுணுக்கமான தொலைகாட்டி உபகரணங்களின் துணையுடன் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு தொடர்ந்தும் விலகிப் போகும் சந்திரன் ஒரு காலத்தில் சூரியனின் ஈர்ப்பு விசையினுள் அகப்பட்டு உள்ளே புதைந்துவிடும். இதுவே அல்குர்ஆன் குறிக்கும் சந்திரனின் இறுதித் தவணையாக இருக்கலாம்.

"(அந்நாளில்) சூரியனும் சந்திரனும் ஒன்றாக்கப் பட்டுவிடும்." (75:9)

ஹிஜ்ரத்திற்கு 5 வருடங்களுக்கு முன்பு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தூதுத்துவத்தை நிரூபித்துக் காட்டும் விதமாக ஒரு சம்பவம் இடம்பெற்றது. ஒரு முறை மக்கா குறைஷியர்கள் நபியவர்களிடம் நீங்கள் இறைத்தூதர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஏதும் அத்தாட்சிகளைக் காட்டுமாறு கோரினார்கள். அப்போது நபிகளார் அல்லாஹ்வின் உதவியுடன் தமது சுட்டு விரலினால் சந்திரனை இரண்டாகப் பிளந்து காட்டி "நான் இறைத்தூதர் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்" என்று கூறினார்கள். எனினும் அக்காபிர்கள் அப்பிரம்மாண்டமான அத்தாட்சியை சூனியம் என்று புறக்கணித்து மறுத்து விட்டனர். உடனே அல்லாஹ் இது தொடர்பாக 'அல்கமர்' என்ற அத்தியாயத்தின் முதல் இரு வசனங்களையும் இறக்கினான். சந்திரன் நபியவர்களால் பிளக்கப்பட்டது கூட மறுமைக்கான ஓர் அடையாளமாகும்.

"மறுமை நாள் நெருங்கிவிட்டது (என்பதைத் தெரிவிக்க) சந்திரனும் பிளந்து விட்டது. இதனை அவர்கள் கண்டபோதிலும் புறக்கணித்து இது சூனியமே என்றும் கூறுகின்றனர்." (58:1-2)

*1400* ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்ட அல்குர்ஆனிய வசனங்கள் அறிவியலின் நவீன கண்டுபிடிப்புகளுக்கு எவ்வாறு சான்றிதழ் வழங்குகின்றன என்று பார்த்தீர்களா? அல்குர்ஆன் ஒரு விஞ்ஞானப் புத்தகமல்ல. அது முழு வாழ்க்கைக்குமான வழிகாட்டி. இறை இருப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் இது அவனது வார்த்தைகள்தாம் என்பதை நிரூபிப்பதற்காக சில அத்தாட்சிகளையும் அல்லாஹ் அல்குர்ஆனிலே எமக்கு விளக்குகின்றான். அதனால்தான் குர்ஆனிய வசனங்கள் ஆயாத் (signs) அத்தாட்சிகள் என அழைக்கப்படுகின்றன.

"Alquran is not a science book. It is a signs book."

## பயனற்ற அறிவுரை

ஒரு மரத்தில் இரண்டு தூக்கணாங் குருவிகள் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தன. ஒரு நாள் கடும் மழை பெய்தது. கடுங்குளிர் அடிக்கத் துவங்கியது. அந்த மரத்திற்கு குளிரில் நடுங்கியபடி ஒரு குரங்கு வந்து சேர்ந்தது. குளிரில் நடுங்கியபடி இருந்த குரங்கைப் பார்த்து இரக்கப்பட்ட தூக்கணாங் குருவிகள், குரங்கே, உனக்குக் கை, கால்கள் இருந்தும் இப்படி மழை, குளிர், வெயில் போன்ற துன்பத்தை ஏன் அனுபவிக்க வேண்டும்? நீ உனக்கென்று ஒரு வீடு கட்டிக் கொண்டால் இந்த துன்பமில்லாமல் இருக்கலாமே? என்றன.

ஆனால் அதைக் கேட்டதும் அந்தக் குரங்குக்கு கோபம் வந்தது. வல்லவனான எனக்கு இந்த தூக்கணாங் குருவிகள் அறிவுரை சொல்வதா? என்று எண்ணியபடி, எனக்கு வீடு கட்டும் சக்தி இல்லை. ஆனால், நீங்கள் கட்டியிருக்கும் உங்கள் வீட்டை எப்படிப் பிரித்து எறிகிறேன் பார்? என்றபடி குருவிகளின் கூட்டைப் பிரித்தெறிந்தது.

பாவம் தூக்கணாங் குருவிகள் குரங்குக்கு சொன்ன அறிவுரையால் தங்கள் வீட்டை இழந்தன! எவருக்கும் அறிவுரை கூறும் முன் அவரைப் பற்றி தெரிந்து கொள்வது அறிவுடைமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி...)






# அல்குர்ஆனால் கவரப்பட்ட டாக்டர் காரி மில்லர்

3. "நான் உங்களுக்கு உபதேசிப்பது ஒரே ஒரு விடயத்தைப் பற்றித்தான்; நீங்கள் இரண்டிரண்டு பேர்களாகவோ, தனித் தனியாகவோ அல்லாஹ்வுக்காக எழுந்தமர்ந்து பின்னர் சிந்தித்துப் பாருங்கள் என்று (நபியே!) நீர் கூறும். உங்கள் நண்பருக்கு பைத்தியம் எதுவுமில்லை. உங்களுக்குக் கடினமான வேதனை வருவதற்கு முன்னர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரல்லாமல் அவர் வேறில்லை." (அஸ்ஸபஉ: 46)

மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனத்தை உற்று நோக்கிய மில்லர் ஒரு கணம் மலைத்துப் போய்விட்டாராம். சமூகவியல் ஆய்வுச் செயற்திட்டம் என்ற தொனிப்பொருளில், ஒரு ஆய்வாளர் நிகழ்த்திய ஆய்வை (பரிசோதனையை) மில்லர் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாய்வை நிகழ்த்துவதற்காக பல்வேறுபட்ட ஆய்வாளர்களை ஒன்றுசேர்த்து அவர்கள் அனைவரும் முன்வைத்த பிரதிபலன்களை ஒப்பிட்டு நோக்கினார். உரையாடுவோரின் எண்ணிக்கை இருவராக இருக்கும்போதே ஆய்வுக்கான செயற்திட்டம் வெற்றியடையும் என்ற விடயம் தெளிவாகியது. இவ்வெண்ணிக்கையானது இரண்டை விட அதிகரித்தால், செயற்றிட்டத்தின் வலு குறைந்து விடும் என்ற விடயமும் தெளிவாகியது. இவ்வாறான மிக நுணுக்கமான விடயங்களை அல்குர்ஆன் மிகத் துல்லியமாக மேற்குறித்த வசனத்திலே சுட்டிக்காட்டியிருப்பது கண்டு மில்லர் மிகவும் வியப்படைந்தார்.

4. அல்குர்ஆனில் மர்யம் என்ற பெயரில் ஒரு பூரண அத்தியாயமே காணப்படுகின்றது. தாம் புனித வேதநூலாகக் கருதும் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கும் நிகரில்லாத அளவுக்கு, மர்யம் (அலைஹஸ்ஸலாம்) அவர்களின் புகழையும் சிறப்பையும் இவ்வத்தியாயம் பறைசாற்றியது.

இது இவ்வாறு இருக்க, அதில் நபியின் மனைவியாகிய ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் பெயரிலோ அல்லது நபியின் மகளாகிய பாத்திமா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் பெயரிலோ எந்தவொரு அத்தியாயமும் காணப்படுவதில்லை. மேலும், ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பெயர் அல்குர்ஆனில் 25 முறை குறிப்பிடப்பட்டிருக்கும் அதேவேளை, முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது பெயரோ 5 முறை மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

5. நபியவர்கள் கொண்டுவந்த வேதத்தை ஷைத்தான்கள்தான் அவருக்கு ஓதிக்காட்டி பூர்த்தி செய்தன என்று வஹியையும் தூதுத்துவத்தையும் நிராகரிப்போர் கருதுகின்றனர். எனினும், இதோ பின்வருமாறு அல்குர்ஆன் இவர்களுடன் சவால் விடுகின்றது:

"இன்னும் ஷைத்தான்கள் இ(வ்வேதத்)தைக் கொண்டு இறங்கவில்லை. மேலும், அது அவர்களுக்குத் தகுதியுமல்ல. (அதற்கு) அவர்கள் சக்தி பெறவும் மாட்டார்கள்."

(அஷ்ஷுஅறா: 210, 211)

ஆகவே, ஷைத்தான்கள் ஒரு நூலை எழுதிவிட்டு, அதனை எழுத என்னால் முடியாது என்று அவையாகவே கூறுமா? மாறாக, அந் நூலை ஓதும்போது என்னிடமிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள் என்றும் அது கூறுமா?

6. இறைத் தூதரும் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் குகையில் முற்றுகையிடப்பட்டுக் கொண்டிருந்த வேளை, அவர்களது பாதங்களுக்குக் கீழால் இணை வைப்பாளர்களில் எவரேனும் பார்த்துவிட்டால் அவர்கள் இருவரையுமே கண்டுவிடுவர். இந்நிலையில் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மிகவும் அச்சம் கொண்டு காணப்பட்டார். எனினும், அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் அச்சத்தைக் கண்ட நபியவர்கள், பின்புறமாக ஏதேனும் கதவுகள் உண்டா? என்று பார்ப்போம் என்றோ, யாராவது நாம் பேசுவதை செவியுற்று விடாத வண்ணம் வாய்மூடி மௌனமாக இருந்து கொள்ளவும் என்றோ கூறவில்லை.

பொதுவாக ஒரு சாதாரண மனிதனின் இயல்பான பதிலாக மேற்கூறப்பட்ட வசனங்கள்தான் இடம்பெறும். எனினும் இந்நிலைக்கு மாற்றமாக இறைத்தூதர் அவர்கள் அபூபக்ரை நோக்கி மிகவும் நிதானமாகவும் அமைதியாகவும் "கவலைப்பட வேண்டாம்! நிச்சயமாக அல்லாஹ் எங்களோடு உள்ளான்!" என்றும் "அல்லாஹ் எம்முடன் உள்ளான். அவன் எங்களை கைவிட மாட்டான்" என்றுமே கூறினார்கள். ஆகவே, இது ஒரு பொய்யனின் அல்லது துரோகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் புத்தியின் வெளிப்பாடா? அன்றி, அல்லாஹ்வின் உதவி தனக்கு என்றென்றும் உண்டென்று உறுதியாக நம்புகின்ற ஒரு நபியின், இறைத்தூதரின் அறிவின் வெளிப்பாடா?

7. அபூலஹப் மரணிப்பதற்கு பத்து வருடங்களுக்கு முன்னரே, 'அல்லஹப்' எனும் அத்தியாயம் இறங்கியது. எனவே, இந்தக் குர்ஆன் பொய்யானது என்பதை நிரூபிக்க 365 x 10 = 3650 நாட்களும் சந்தர்ப்பங்களும் தாராளமாகக் காணப்பட்டன. எனினும், இவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. எவ்வளவு அபூர்வமான சவால் பொய்யாகவேனும், வெளித்தோற்றத்துக்கு மாத்திரம் நடிப்புக்காக வேனும் அபூ லஹப் இஸ்லாத்தைத் தழுவ வில்லையே!! (இவ்வாறு இவன் பொய்யாக வேனும் இஸ்லாத்தைத் தழுவியிருந்தால் அல்குர் ஆன் பொய்யாக்கப்பட்டிருக்கும்.) இன்றுவரை இதே வசனங்கள் ஓதப்பட்டுக் கொண்டே இருக் கின்றன.

இது அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வஹி என்று அறிந்திருக்காவிட்டால், தன்னிடமுள்ள வேதநூல் சத்திய உண்மையே என்ற நம்பிக்கையுடன் பத்து வருடங்களாக எப்படி நபியவர்களால் வாழ முடிந்திருக்கும்! (எனவே, அல்குர்ஆன் இறைவனிட மிருந்துள்ள சத்திய வேதமேயன்றி வேறில்லை என்ற மன உறுதியுடனே நபியவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறே இப்பத்து வருட நீண்ட கால எல்லையில் அபூலஹபும் இஸ்லாத்தை ஏற்கவில்லை.)

8. "(நபியே!) இவற்றை (இதற்கு முன்னர்) நீங்களோ. உங்கள் சமுதாயத்தினரோ அறிந்திருக்கவில்லை."

(ஹூத்: 49)

என்ற திருமறை வசனத்தின் விளக்கத்தை குர்ஆனி யக் கதைகள் சிலவற்றின் பின்னணியூடாக விளக்கு கின்றபோது, டாக்டர் மில்லர் பின்வருமாறு கூறுகின் றார்: சமய ரீதியான புனித நூல்கள் எதுவுமே இவ்வாறான உரைநடையுடன் பேசுவதைக் காண முடியாது! எனினும், அல்குர்ஆன் அதனை ஓதுவோ ருக்கு தகவல்களை வழங்கிவிட்டு, இவை புதிய தகவல்களாகும் என்று கூறுகின்றது.

இது நிகரேயில்லாத ஒரு சவாலாகவல்லவா இருக்கின்றது! மக்காவாசிகள் வீண் வாதாட்டத்துக் காகவேனும் நபியவர்களை நோக்கி, (முஹம்மதே!) நீங்கள் பொய்யுரைத்து விட்டீர்! நீங்கள் கூறும் விடயங்கள் ஏற்கனவே எமக்குத் தெரிந்தவையே என்று கூறியிருந்தால் என்ன நடந்திருக்கும்? இவ்வாறே, ஆய்வாளர்களில் எவரேனும் குதர்க்கவாதம் புரிகின்ற நோக்கிலேனும், (முஹம்மதே!) இந்தத் தகவல்கள் இதற்கு முன்னர் அறிமுகமான, அறியப் பட்டவையாகவே உள்ளன என்று கூறியிருந்தால் எப்படியிருந்திருக்கும்? (எனினும், இவ்வாறு அல்குர்ஆன் புதிய தகவல்கள் என்று கூறிய எதையும் எவருமே பழையவை, அறியப்பட்டவை என்று கூறவில்லை. இவ்வாறு கூறியிருந்தால் அல்குர்ஆன் பொய்ப்பிக்கப்பட்டிருக்கும்) எனினும், இவ்வாறு எதுவுமே நடைபெறவில்லையே!!

9. குர்ஆனிய வஹியின் நம்பகத்தன்மையை மாசு படுத்துவதற்கென, எத்தனையோ ஆய்வுகள், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை எதுவும் பலனளிக்கவில்லை என்ற உண் மையை, புதிய கத்தோலிக்க கலைக் களஞ்சியம் அல்குர்ஆன் என்ற தலைப்புக்குக் கீழே பதிவு செய்துள்ளது. இதனை டாக்டர் மில்லர் பின்வரு மாறு சுட்டிக்காட்டுகின்றார்:

அல்குர்ஆன் ஒரு நோயாளியின் வெறும் கற்பனை கள், அது ஷைத்தானின் ஊசலாட்டங்கள் என்றும் அல்குர்ஆனை நபியவர்களுக்குக் கற்பித்தவர் ஒரு மனிதரேயாவார் என்றும் இது ஒரு பழைய நூலை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெற்றது என்றும் அல்குர்ஆனுக்கெதிரான பல்வேறுபட்ட கருத்துக்களை அவை கூறியிருந்தன. எனினும், ஈற்றில் அந்த ஆய்வுகள் அனைத்தும் பின்வரும் முடி வையே முன்வைத்தன: வரலாறு நெடுகிலும் அல்குர்ஆனுக்கு எதிரான பல வாதங்கள் தோன்றிய போதும் ஈற்றில் அவை அனைத்துமே அல்குர்ஆன் ஒரு அறிவுள்ள மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல என்ற முடிவையே ஏற்றுக் கொண்டன.

மேலும், டாக்டர் மில்லர் பின்வருமாறு கூறுகின்றார்:

வஹியின் நம்பகத்தன்மையை இழக்கச் செய்யும் இவ்வகை வாதங்களில் ஒன்றை நடத்துவதற்கு ஒரு தேவாலயம் தீர்மானித்திருந்தது. எனினும், இறுதி யாக அதே தேவாலயம் குர்ஆனுக்கெதிரான இத்தகு அனைத்துவித வாதங்களையும் புறக்கணித்து விட்டது. இருப்பினும், குர்ஆன் பற்றிய முஸ்லிம் களின் வாதங்கள் உண்மை என்பதை ஏற்றுக் கொள்ளும் தைரியமும் குறித்த தேவாலயத்திடம் காணப்படவில்லை.

அஹ்மத் தீதாதுடன் இஸ்லாமும் கிறிஸ்தவமும் என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்திலே, கிறிஸ் தவம் சார்பாக டாக்டர் மில்லர் கலந்து கொண்டு வாதிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1977 இல் அல்குர்ஆன் பற்றிய ஆய்வை மேற்கொள்ள ஆரம்பித்த இவர் 1978 ஆம் ஆண்டு இஸ்லாத்தைத் தழுவினார். இஸ்லாத்தில் இணைந் ததும் மில்லர் தனது பெயரை அப்துல் அஹத் உமர் என்று மாற்றிக் கொண்டார்.

நன்றி: இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: اَلْمُسْلِمُ أَخُو مُسْلِمٍ لاَ يَظْلِمُهُ وَلاَ يُسْلِمُهُ مَنْ كَانَ فِي حَاجَةِ أَخِيهِ كَانَ اللهُ فِي حَاجَتِهِ، وَمَنْ فَرَّجَ عَنْ مُسْلِمٍ كُرْبَةً فَرَّجَ اللهُ عَنْهُ بِهَا كُرْبَةً مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ، وَمَنْ سَتَرَ مُسْلِماً سَتَرَهُ اللهُ يَوْمَ الْقِيَامَةِ (متفق عليه)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு சகோதரனாவான். அவன் அந்த சகோதரனுக்கு அநியாயம் செய்யமாட்டான். அவனை பகைவனிடம் காட்டிக் கொடுக்கவும் மாட்டான். யார் தனது சகோதரனின் தேவையை நிறைவேற்றி வைக்கிறாரோ அவருடைய தேவையை அல்லாஹ் நிறைவேற்றி வைப்பான். யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை இல்லாமல் செய்கின்றாரோ அல்லாஹ் மறுமையில் அவரது கஷ்டத்தை இல்லாமல் செய்வான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கின்றாரோ அவருடைய குறையை அல்லாஹ் மறுமையில் மறைப்பான்." (அல்புகாரி, முஸ்லிம்)

சூரியனின் கடும் உஷ்ணத்தின் காரணமாக வியர்வை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடும் மறுமை நாளில் சிங்கத்தைக் கண்டு விரண்டோடுவதைப் போல் மனிதன் தாய், தந்தையர் மற்றும் உறவுகளைவிட்டு விரண்டோடுவான். அங்கு அவன் செய்வதறியாது திகைத்து தனது இறுதி முடிவை எண்ணி அஞ்சியவனாக வாடிவதங்கி சோகம் நிறைந்த முகத்தோடு தவித்துக் கொண்டிருப்பான். இத்தகைய சொல்லொணாத் துயரம் நிறைந்த மறுமை நாளில் இறைவன் அனைவரது முன்னிலையிலும் எமது குறைகள் அனைத்தையும் எடுத்துக் காட்டிவிட்டால் எமது நிலை...!

மறுமையில் அல்லாஹ் தனது குறைகளை மறைத்து தன்னைப் பொருந்திக் கொள்ளவேண்டும் என விருப்பம் கொள்ளும் ஒரு மனிதனுக்கு அண்ணலார் அவர்கள் கூறிய வழிகாட்டலையே மேற்கூறிய ஹதீஸ் தெளிவு படுத்துகின்றது. இந்த வகையில் அந்த நபிமொழி முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் எனக் குறிப்பிடுவதுடன் அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு செய்யவேண்டிய, அவர்கள் ஏனையவர்களுடன் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை எமக்கு விளக்குகின்றது.

உலகவாழ் மக்கள் அனைவரும் பல்வேறுபட்ட குறைகளுடனும் பலவீனங்களுடனும் காணப்படுவது இயல்பான ஒன்றே. இவற்றின் காரணமாக அவர்கள் பல்வேறு தவறுகளைச் செய்யும் இயல்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஒரு முஸ்லிம் சகோதரனிடம் காணப்படுகின்ற குறையை மற்றவர்களிடம் அம்பலப்படுத்தி குறித்த சகோதரனை மற்றவர்களுக்கு மத்தியில் தலைகுனியச் செய்து பரிகசித்து மகிழ்வது இஸ்லாத்தின் பார்வையில் பாவமான கருமமாகும். இப்பாவத்தினைப் புரியும் மனிதன் மறுமையில் ஏனைய மனிதர்கள் முன்னிலையில் தனது குறைகள் பகிரங்கப்படுத்தப் பட்டு அவமானப்படுத்தப்படுவான்.

தனது சகோதரனின் ஒரு குறையைக் கண்டும் அதனை பிறருக்கு பகிரங்கப்படுத்தாமல் மறைத்து விடும் மனிதனின் குறைகளை அல்லாஹ் மறுமை நாளில் மறைத்து விடுவான் என்பதை அண்ணலாரின் பொன் மொழி எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. மேலும் பிறர் குறைகளைத் துருவித் துருவி ஆராய்வதனை அல்குர்ஆனும் தடுத்துள்ளது.

"மற்றவர்களுடைய குறைகளை நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டாம்." (அல்ஹுஜ்ராத்: 12)

உலகில் பிறர் குறைகளைக் கண்டு அதனைப் பகிரங்கப்படுத்தி மகிழ்ச்சியுறுபவர் தன்னிடம் காணப்படும் குறையை இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்து தன்னைத் திருத்திக் கொள்வதற்கான வழிவகைகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் பிறர் குறைகளை துருவித் துருவி ஆராய்வதனாலும் அதனை அம்பலப்படுத்துவதனாலும் சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்ற சகோதரத்துவம் சிதைவுற்று மோசமான விளைவுகள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது.

இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் அந்நாளில் எமது குறைகளை மற்றவர்களுக்குத் தெரியாது அல்லாஹ் மறைக்க வேண்டுமெனில் இவ்வுலகில் பிற சகோதரர்களின் குறைகளை மறைப்போம். இதனால் இஸ்லாமியச் சகோதரத்துவம் பன்மடங்கு வலுப்பெற உறுதுணையாய் இருப்போம். பிறரிடம் குறைகளைக் காணும்போது அவற்றை அல்லாஹ்வுக்காக என்ற தூய நோக்கில் உரியவரிடம் உரிய முறையில் பண்பாக அதனை எடுத்துக்கூறி திருத்த முயற்சி செய்வோம். எம்மிடமும் குறித்த குறை ஏற்படாதிருக்க அல்லாஹ்வைப் பிரார்த்தித்து, பிறர் குறைகளை மறைத்து சகோதரத்துவம் பேணுவதற்கு திடசங்கற்பம் பூணுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் அகரம்


## உங்களுக்கு தெரியுமா?

### தற்பொழுது வாழும் மிகப் பெரிய மீன்



திமிங்கில சுறா எனப்படும் மீனே தற்பொழுது வாழும் மிகப் பெரிய மீனினமாகும். இவை கிட்டத்தட்ட 40அடி நீளத்தையும் (12 மீற்றர்) 14 மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான நிறையையும் கொண்டதாய் இருக்கும். அதாவது இது இரண்டு ஆபிரிக்க யானைகளின் சராசரி நிறையைக் கொண்டதாய் உள்ளது. இது கால்பந்து அளவிலான முட்டைகளை இடுகின்றது. இவை மிதக்கும் சிறிய உயிரினங்களையே உணவாக உட்கொள்கின்றது. இதன் உருவம் மிகப் பெரியதாய் இருப்பினும் இது மனிதர்களுக்குத் தீங்கு விளைவிப்பதில்லை.

### உலகில் மிகவும் வேகமான தரைவாழ் மிருகம்



சிறுத்தையே மிகவும் வேகமாக செல்லக்கூடிய தரை வாழ் உயிரினமாகும். இவை ஓடுவதற்கு ஆரம்பித்து 2 செக்கன்களில் மணிக்கு 80 கி.மீ. என்ற வேகத்தை அடைந்து மணிக்கு 110 கி.மீ. வேகத்தை எட்ட வல்லது. எனினும் இவ்வேகத்தினை முதல் 100 மீற்றர்களுக்கு மட்டுமே இவற்றால் தக்க வைத்துக் கொள்ள முடியும். இவற்றின் உறுதியான பாதங்கள் ஓட்ட வீரர்களின் முன் சப்பாத்துக்களை ஒத்தவையாக இருப்பதால் இவை ஓடும்போது அபரிமிதமான வேகம் கிடைக்கின்றது.

### துருவ மண்டல மிருகங்கள்

துருவ மண்டலங்களில் வாழும் மிருகங்களின் உடலமைப்பு கடும் குளிரிலும் உயிர் வாழக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு வாழும் பென்குயின், நீர் நாய்கள், பனிக் கரடிகள் மற்றும் திமிங்கிலங்களது உடலில் காணப்படும் தடிப்பான ஒரு வகை கொழுப்புப் படை இவற்றை கடும் குளிரிலிருந்து பாதுகாக்கின்றது.

எப். சம்ஹா மிர்சூக்,
நளீம் ஹாஜியார் பெண்கள் பாடசாலை,
பேருவளை


### முதலைகள் பற்றி



- முதலைகள் எக்காரணத்தைக் கொண்டும் எந்தச் சூழலிலும் தாவர உணவை உண்ணாது.
- இவை துணிவுடன் மனிதர்களைக் கூடத் தாக்கிக் கொன்று உண்ணும் இயல்புடைவை.
- இவை தமது உணவுக்காக எந்தவொரு உயிரினமும் கிடைக்காத போது பசியின் அகோரத்தால் தமது இனத்தைச் சேர்ந்த மற்ற முதலைகளையே கொன்று சாப்பிடக் கூடியவை.
- முதலைகள் தமது இரையை மென்று தின்னாமல் முழுமையாக அப்படியே விழுங்கி விடும்.
- முதலையின் கண்ணிலிருந்து வழியும் நீரானது கண்ணீர் அல்ல. மாற்றமாக அதன் உடலிலுள்ள அதிகப்படியான உப்பை வெளியேற்றுவதற்காக அதன் உடலிலுள்ள ஒருசுரப்பியின்மூலம்சுரக்கப்படும் திரவமே ஆகும்.
- முதலையின் வாழ்நாள் முழுவதும் பழைய பற்களுக்கு பதில் புதிய பற்கள் முளைத்துக் கொண்டே இருக்கும்.
- முதலையால் அதன் நாக்கை அசைக்க முடியாது.

ஏ.எம். அஸ்மியா, தரம்- 11
கமு/ அல்ஹம்றா வித்தியாலயம்

### நட்சத்திர மீன்



இது பெயருக்கேற்ப நட்சத்திர வடிவத்தை உடையது. இதன் 5 கரங்களும் இறுகப் பற்றக் கூடிய நூற்றுக்கணக்கான மயிர்ப்பீலி உறிஞ்சிகளைக் கொண்டிருக்கின்றன. இவை ஒரு நிமிடத்துக்கு 2 அங்குலம் வரையிலான வேகத்தில் நகரக்கூடியன. ஒரு நட்சத்திர மீனின் ஒரு கரம் துண்டிக்கப்பட்டாலும் கூட அது மிக வேகமாக வளர்ந்து விடும். துண்டிக்கப்பட்ட கரத்துண்டும் சில வேளைகளில் தனித்த ஒரு நட்சத்திர மீனாக வளர்ந்து விடுவதுண்டு.

எம்.என்.எப். ஹப்ஸா, தரம்- 10
பதுரியா மத்திய கல்லூரி, மாவனல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 12 | - சர்வதேச இளைஞர் தினம் |
| மார்ச் | 8 | -சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 22 | - சர்வதேச குடிநீர் தினம் |
| ஏப்ரல் | 7 | - சர்வதேச சுகாதார தினம் |
| மே | 1 | - சர்வதேச தொழிலாளர் தினம் |
| ஜீன் | 5 | - சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| செப்டம்பர் | 8 | - சர்வதேச எழுத்தறிவு தினம் |
| ஒக்டோபர் | 1 | - சர்வதேச சிறுவர் தினம் |
| ஒக்டோபர் | 3 | - சர்வதேச மது ஒழிப்பு தினம் |
| ஒக்டோபர் | 6 | - சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்டோபர் | 9 | - சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்டோபர் | 15 | - சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்டோபர் | 17 | - உலக வறுமை ஒழிப்பு தினம் |
| நவம்பர் | 20 | - சர்வதேச சிறுவர் உரிமை தினம் |
| டிசம்பர் | 01 | - சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் | 10 | - சர்வதேச மனித உரிமை தினம் |

**எஸ்.எம். ரிஸ்தாக், தரம் - 09**
**கொத்தாத்தீவு மு.ம.வி**

## அறிவுப் புதையல்

* நோபல் பரிசு வழங்கத் தொடங்கிய ஆண்டு - 1901
* பிரான்ஸ் நாட்டின் தேசிய மலர் - லில்லி
* இந்தியாவின் மொத்த ரயில் நிலையங்கள் - 7200
* நீரில் மிதக்கும் உலோகம் - அசமீனியா
* ஆமையின் ஆயுட் காலம் - 300 ஆண்டுகள்
* கறுப்பு வைரம் என அழைக்கப்படுவது - நிலக்கரி
* வெள்ளைத் தங்கம் எனப்படுவது -பருத்தி
* திரவத் தங்கம் எனப்படுவது - பெற்றோலியம்
* ஒரு மின்னலில் உள்ள மின் சக்தி - 250 கோடி வோட்ஸ்
* வெட்டுக்கிளியின் கண்கள் - 5

**எம்.எம். அஸ்லம் சஜா, தரம் - 07**
**அந்நூர் தேசிய பாடசாலை, வாழைச்சேனை**

## இலங்கையின் பிரதான உற்பத்திகளுக்கான நிலையங்கள்

- விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பல்லம
- தேயிலை ஆராய்ச்சி நிலையம் -தலவாக்கலை
- இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
- வைத்திய ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு
- சீமெந்து - புத்தளம், காலி, காங்கேசன்துறை
- கட்டிப்பால் தொழிற்சாலை - பொலன்னறுவை
- பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சபுகஸ்கந்த
- பால் பதனிடும் தொழிற்சாலை - அம்பேவல
- இரும்புருக்குத் தொழிற்சாலை - ஒருவல
- கோதுமை ஆலை -திருகோணமலை

**ஸஹ்ரா அஸ்ஹர், தரம் - 07**
**நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, பேருவளை**

## உயிரின அதிசயங்கள்


- அதிக நீர் அருந்தும் பறவை -புறா
- மிகச் சிறிய முட்டையிடும் பறவை -தேன் சிட்டு
- ஞாபக சக்தி கூடிய விலங்கு -யானை
- நீல நிற இரத்தத்தையுடைய கடல் உயிரினம் -இறால், நண்டு
- பல்லில்லாத முலையூட்டி -தேவாங்கு
- கடல் நீரையே பருகும் ஒரே ஒரு உயிரினம் -பென்குயின்
- பறக்கும் போதே தூங்கும் பறவை - ஆல்மட்றாஸ்
- மிகப் பெரிய வாயுள்ள விலங்கு -நீர் யானை
- பித்தப்பை இல்லாத முலையூட்டி -எலி
- கண்களின் மூலமே வியர்வை வெளியேறும் உயிரினம் -முதலை
- பறக்கும் முலையூட்டி -வௌவால்
- மண்டையோடும் அலகும் ஒரே எலும்பால் அமையப் பெற்ற பறவை -மரங்கொத்தி
- சப்தமிடாத விலங்கு -ஒட்டகச் சிவிங்கி

**ஏ.ஸி. பாரிஸ்**
**தி/ கிண்ணியா அல்அக்ஸா கல்லூரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேறறிஞர் தோமஸ் அல்வா எடிசன்

(1847-1931)



அமெரிக்க நாட்டவரான தோமஸ் அல்வா எடிசன் பல கண்டுபிடிப்புக்களுக்கு உரிமையாளராவார். எடிசனின் கண்டுபிடிப்பாகிய வெப்ப ஒளிர்வு இழை மின் விளக்கு வரலாற்றில் பாரிய திருப்புமுனையாக அமைந்தது. மின்குமிழை கண்டுபிடிப்பதற்காக அயராது உழைத்த அவர் ஆயிரத்திற்கு மேற்பட்ட கண்டு பிடிப்புக்களை உலகுக்குத் தந்துள்ளார். மிகை தொழிற்பாடுடைய குழந்தையாக அவர் கருதப்பட அவரிடம் காணப்பட்ட எதையும் தேடி ஆராயும் இயல்பு காரணமாகும். இவர் அவரது தாயாரிடமிருந்தே வீட்டில் பாடங்களைக் கற்றுக் கொண்டார்.


**அவரது முக்கிய கண்டுபிடிப்புக்களில் சில:**



மின் குமிழ்
(Light bulb)



கிராமபோன்
(Phonograph)



அசையும் காட்சிகளை காட்டும் கமரா (Kintesrcope)

**எம்.இஸட்.எப். சஷ்னா**
**அஷ்ரப் மு.ம.வி, பொல்கொல்ல**

# மின்னேற்ற விதி

2000ம் வருடங்களுக்கு முன்பே கிரேக்கர்கள் நிலைமின் பற்றி அறிந்திருந்தனர். அவர்கள் மின்னேற்றத்தை உருவாக்குவதற்காக கந்தகம், இறப்பர், உரோம வகைகள் என்பவற்றைப் பயன்படுத்தினர்.

கவரும் தன்மையை 'Electricity' என ஆங்கிலத்தில் அழைத்தனர். 'Elektron' எனும் கிரேக்க சொல்லில் இருந்தே 'Electricity' எனும் சொல் உருவாகியது.

**மின்னேற்றக் கோட்பாடு**

- நேர் ஏற்றம் (+), நேரேற்றம் (+) ஒன்றை ஒன்று தள்ளும்.
- மறையேற்றம் (-), மறையேற்றம் (-) ஒன்றை ஒன்று தள்ளும்.
- நேர்ஏற்றம் (+), மறையேற்றம் (-) ஒன்றை ஒன்று கவரும்.


ஒத்த ஏற்றங்கள் ஒன்றை ஒன்று தள்ளும். ஒவ்வாத ஏற்றங்கள் ஒன்றை ஒன்று கவரும் என்பதே மின்னேற்றக் கோட்பாடாகும்.

கி.மு. 550ம் ஆண்டளவில் கிரேக்க தத்துவ ஞானியான தலேஸ் ஒஸ்கார் என்பவர் கம்பளியால் உரோஞ்சிய அம்பர் எனும் பதார்த்தம் உலர்ந்த இலைகளையும் தக்கைத் துண்டுகளையும் கவர்வதைக் கண்டறிந்தார்.

1752 இல் பெஞ்சமின் ப்ராங்க்ளின் என்பவர் மழை பெய்வதற்கு முன்னர் சாவிக் கொத்தொன்றை இணைத்து காற்றில் பட்டத்தை அனுப்பி அதில் வானில் முகில்களுக்கிடையிலும் முகில்களிலிருந்து புவிக்கிடையேயும் மின்னேற்றம் உருவாகிறது என்பதை விளக்கினார்.

18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் முதன் முதலில் ஆபிரகாம் பெனற் என்பவர் மின்னேற்றங்களை இனங்காணக்கூடிய பொன் நிலை மின் காட்டியைக் கண்டுபிடித்தார்.

**பொன்னிலை மின்காட்டி**




**பி.எம். பஸ்லின்**
**தி/ கிண்ணியா மத்திய கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் உள்ள கண்டங்களும் அவற்றின் பரப்பளவும்

- ஆசியாக் கண்டம்
  **431 இலட்சம் சதுர கி.மீ**
- ஐரோப்பாக் கண்டம்
  **105 இலட்சம் சதுர கி.மீ**
- ஆபிரிக்காக் கண்டம்
  **303 இலட்சம் சதுர கி.மீ**
- வட அமெரிக்கக் கண்டம்
  **253 இலட்சம் சதுர கி.மீ**
- தென் அமெரிக்கக் கண்டம்
  **178 இலட்சம் சதுர கி.மீ**
- அவுஸ்திரேலியக் கண்டம்
  **76 இலட்சம் சதுர கி.மீ**
- அந்தாட்டிக்கா கண்டம்
  **140 இலட்சம் சதுர கி.மீ**

எம்.எப்.எம். நிப்ரா, தரம்- 09
க/வ/அஸ்-ஸபா மகா வித்தியாலயம்

## மினித் தகவல்கள்

- உலகிலேயே மிக நீளமான மலை-
  ▸ **அந்தீஸ் மலை**


அந்தீஸ் மலை

- உலகில் எரிமலை இல்லாத கண்டம்-
  ▸ **அவுஸ்திரேலியா**
- கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு-
  ▸ **நெதர்லாந்து**
- ஐ.நா. சபையின் சின்னம்-
  ▸ **ஒலிவ் மரக்கிளை**


ஒலிவ் மரக்கிளை

- விமான விபத்துக்களின் காரணத்தை கண்டறிய உதவும் சாதனம்-
  ▸ **கறுப்புப் பெட்டி (Black box)**


கறுப்புப் பெட்டி

- நவீன ஓவியங்களின் தந்தை-
  ▸ **பிக்காசோ**


பிகாஸோ

- உலகின் மிக நீளமான குகை-
  ▸ **மாமத் குகை (560 Km)**
- உடலை கெடாமல் வைத்திருக்கும் திரவம்-
  ▸ **ஃபார்மலின்**


மாமத் குகை

எம்.என்.எப். நிப்லா, தரம்- 09
மடிகே மு.ம.வி. முதுன்துவ

## வருடங்களும் வருடத்தில் கொண்டாடப்படும் விழாக்களும்

- முதலாம் வருடத்தில் கொண்டாடப்படும் விழா → காகித விழா
- இரண்டாம் வருடத்தில் கொண்டாடப்படும் விழா → கருத்து விழா
- மூன்றாம் வருடத்தில் கொண்டாடப்படும் விழா → தோழி விழா
- ஐந்தாம் வருடத்தில் கொண்டாடப்படும் விழா → மர விழா
- ஆறாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → சர்க்கரை விழா
- ஏழாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → கம்பளி விழா
- எட்டாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → வெண்கல விழா
- பத்தாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → தகர விழா
- பன்னிரெண்டாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → லிலன் விழா
- பதின்நான்காவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → லேஸ் விழா
- பதின்ஐந்தாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → படிக விழா
- முப்பதாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → முத்து விழா
- ஐம்பதாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → பொன் விழா
- நூறாவது வருடத்தில் கொண்டாடப்படும் விழா → நூற்றாண்டு விழா

ஆர். சுரையா பானு, தரம்- 10
அக்/மின்ஹாஜ் மகா வித்தியாலயம், பாலமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

தொடர்: 18


# அன்றாட வாழ்வில் அரபு மொழி

اللغة العربية


அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

## மரக்கறி வகைகள் اَلْخَضْرَوَاتُ

அல்பதாதீஸ்- உருளைக் கிழங்கு اَلْبَطَاطِيْسُ




அஸ்ஸூமு- வெள்ளைப் பூடு اَلثُّوْمُ




அல்பக்லு - கீரை اَلْبَقْلُ




அல்குர்ராஸ்- லீக்ஸ் اَلْكُرَّاثُ




அஷ்ஷமன்தர்- பீற் கிழங்கு اَلشَّمَنْدَرُ



அல்பஸல் - வெங்காயம் اَلْبَصَلُ




அல்ஜஸர் - கரட் اَلْجَزَرُ




அல்மல்பூப் - கோவா اَلْمَلْفُوْفُ




அல்பாதின்ஜான்- கத்தரிக்காய் اَلْبَاذِنْجَانُ



அல்பாஸூல்யா- போஞ்சி اَلْفَاصُوْلْيَا



அல்கிஸ்ஸா- வெள்ளரிக்காய் اَلْقِثَّاءُ



அத்தமாதிம்- தக்காளி اَلطَّمَاطِمُ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்களைத் தெரிந்து கொள்வோம்

| | பெண்பால் | ஆண்பால் |
|---|---|---|
| சிவப்பு | حَمْرَاءُ | أَحْمَرُ |
| வெள்ளை | بَيْضَاءُ | أَبْيَضُ |
| கறுப்பு | سَوْدَاءُ | أَسْوَدُ |
| நீலம் | زَرْقَاءُ | أَزْرَقُ |
| பச்சை | خَضْرَاءُ | أَخْضَرُ |
| மஞ்சள் | صَفْرَاءُ | أَصْفَرُ |
| செம்மஞ்சள் (Orange) | بُرْتُقَالِيَّةٌ | بُرْتُقَالِيٌّ |
| ஊதா (Violet) | بَنَفْسَجِيَّةٌ | بَنَفْسَجِيٌّ |

# நிறங்களை அடையாளப்படுத்துவோம்

குருதியின் நிறம் யாது?



..................... الدَّمُ

வாழைப்பழத்தின் நிறம் யாது?



..................... الْمَوْزُ

காகத்தின் நிறம் யாது?



..................... الْغُرَابُ

தோடம்பழத்தின் நிறம் யாது?



..................... الْبُرْتُقَالُ

கத்தரிக்காயின் நிறம் யாது?



..................... الْبَاذِنْجَانُ

பாலின் நிறம் யாது?



..................... اللَّبَنُ

வானத்தின் நிறம் யாது?



..................... السَّمَاءُ

மரங்களின் நிறம் யாது?



..................... الأَشْجَارُ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Sister Rumman

# How much do you know?

Assalamu alaikum dear friends,

This February, I meet you with a TV special. How often do you watch TV? I heard that you spend most of your time in front of the television.



But look at this.

"Television can give us so much, except the time to think."
-Bernice Bureshin-
Los Angel's Times

Aaah!, What is it that is so special about TV?




## WHAT DO WE DO AT NIGHT?

- Children watch cartoons
- Dads watch news
- Moms watch dramas

And the study table is empty.

## We watch



- ✓ New things
- ✓ Daily happenings
- ✓ Movies
- ✓ Politics

And we learn to explore and entertain ourselves.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## But

"Too much screen time can interfere with activities such as being physically active, reading, doing homework, playing with friends, and spending time with family."

http://kidshealth.org



# Disadvantages



- Over weight due to consummation of snacks while watching TV.
- Problems in eye sight, posture and memory
- Waste of time
- Repeated attention towards violence.

Mrs. Ayn says
*"My daughter Sara forgets to switch off the light when she leaves the room. She hurries to watch her favourite TV show."*



Are you one like Sara?



## "Oh, I am afraid of it! Tell me an alternative"

Here it is,
Thrilling news.
It's all about books. Books can take you to a hidden world.
You'll meet many people there. It's going to be really exciting... I'm going to introduce a book to you this time.




## *"Swami and friend"*

by R.K. Narayan.



Try to find out this book in book shops or libraries.
Patiently sit down and read it well. Tell me whether you feel what I say.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Word of the month

**'Except'**- This word is used when you want to leave out some thing from a lot of things.




"I spent all my money except 1000/="

Or

"All of you may go except Ahamed"

# Your corner

## Mulla meets the king



One day Mulla Nasrudine went to meet the king. After he returned to the village, the villagers questioned him in the following manner:

"Did you meet the king? What happened there?"

"Oh! There were many gentlemen gathered there to meet the king. And they all spoke to him so keenly. Though the king heard them well, he did not speak to them. But when I spoke, he replied me well."

Then a man suddenly asked Mulla "what did the king say to you?"

Mulla looked at every one very proudly and said "Do you know what the king said to me?"

**"Shut up your mouth you idiot"**


Every one laughed and said to themselves "the king has spoken to Mulla very well."

L.M.N. Shathir
7E
St.Sylvester's College
Kandy.

*I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.*


*So write to me at* Or mail me to

HOW MUCH DO YOU KNOW?



A 61/ 5,
Zahira Road ,
Mawanella.

aharamenglish@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலத்திற்கோர் அருட்கொடை

ஹலீமா நாயகி அவர்கள் கூறுகிறார்கள்:

நான் எனது கணவர் மற்றும் கைக்குழந்தையுடன் ஸஅத் கிளையைச் சேர்ந்த சில பெண்களோடு பால் குடிக்கும் குழந்தைகளைத் தேடிப் புறப்பட்டோம். அது கடுமையான பஞ்ச காலம். நான் எனது வெள்ளைக் கழுதையில் அமர்ந்து பயணித்தேன். எங்களுடன் ஒரு வயது முதிர்ந்த பெண் ஒட்டகம் இருந்தது. அதில் ஒரு சொட்டு பால் கூட கறக்க முடியாது. எங்களது குழந்தை பசியால் அழுது கொண்டிருந்ததால் இரவு முழுவதும் எங்களால் உறங்க முடியவில்லை. எனது மார்பில் அக்குழந்தையின் பசி தீர்க்கும் அளவு பாலும் இல்லை. எங்களது ஒட்டகையிலும் பாலில்லை. எனினும், அல்லாஹ்வின் புறத்திலிருந்து என் சிரமத்திற்கான விடிவையும் அவனது அருளையும் பெரிதும் எதிர்பார்த்திருந்தேன். நான் பயணித்த பெண் கழுதை மிகுந்த பலவீனத்துடன் மெதுவாகவே சென்றது. இது என்னுடன் வந்த குழுவினருக்கு பெரும் சிரமத்தை அளித்தது.

ஒரு வழியாக மக்காவை அடைந்து பால்குடிக் குழந்தைகளைத் தேடி அலைந்தோம். எங்களுடன் சென்ற அனைத்துப் பெண்களிடமும் அல்லாஹ்வின் தூதரைக் காட்டினார்கள். எனினும், அக்குழந்தை அநாதை என்று கூறப்பட்டதால் அனைவரும் அதனை பெற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். ஏனெனில், குழந்தையின் தந்தையிடமிருந்தே நாங்கள் ஊதியம் பெறமுடியும். இவர்கள் அநாதை என்பதால் தாய் அல்லது பாட்டனார் எங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்? என எங்களுக்குள் பேசிக் கொண்டோம். எனவே, அல்லாஹ்வின் தூதரை எடுத்துச் செல்ல எங்களில் எவரும் விரும்பவில்லை. என்னைத் தவிர என்னுடன் வந்த அனைத்துப் பெண்களுக்கும் குழந்தைகள் கிடைத்தன.

அனைவரும் திரும்பிச் செல்லத் தொடங்கியபோது நான் எனது கணவரிடம் அனைவரும் குழந்தையுடன் திரும்புகையில், "நான் வெறுங் கையுடன் செல்வதில் எனக்குச் சிறிதும் சம்மதமில்லை. அல்லாஹ்வின் மீதாணையாக! நான் அந்த அநாதைக் குழந்தையை பெற்று வருகிறேன்" என்று கூறியதற்கு அவர், "தாராளமாகச் செய்யலாமே! அக்குழந்தையின் மூலம் அல்லாஹ் நமக்கு (பரக்கத் செய்யலாம்) வளம் தரலாம்" என்றார். நான் அங்கு சென்று குழந்தையை வாங்கி வந்தேன். எனக்கு வேறு எந்தக் குழந்தையும் கிட்டவில்லை என்ற காரணத்தால் மட்டுமே நான் அக்குழந்தையை வாங்கிக் கொண்டேன்.

பின்னர் நான் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பினேன். அக்குழந்தையை எனது மடியில் வைத்தவுடன் எனது மார்புகளில் பால் சுரந்தது. அக்குழந்தை வயிறு நிரம்ப பால் அருந்தியது. அதன் சகோதரராகிய (எனது குழந்தையும்) பாலருந்தியது. பிறகு இருவரும் உறங்கி விட்டனர். அதற்கு முன் நாங்கள் எங்களது குழந்தையுடன் உறங்க முடிந்ததே இல்லை. எனது கணவர் எங்களது வயது முதிர்ந்த ஒட்டகையை நோக்கிச் சென்றார். அதன் மடி பாலால் நிரம்பியிருந்தது. அதை கறந்து நானும் எனது கணவரும் பசி தீரக் குடித்தோம். அன்றிரவை நிம்மதியாகக் கழித்தோம். காலையில் எனது கணவர், "ஹலீமாவே அல்லாஹ்வின் மீதாணையாக! நீ மிகவும் பரக்கத் (வளம்) பொருந்திய ஒரு குழந்தையை அடைந்திருக்கிறாய்" என்றார். அதற்கு நான், "அப்படித்தான் நானும் நம்புகிறேன்" என்றேன்.

பிறகு நாங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். எனது பெண் கழுதையில் அக்குழந்தையையும் அமர்த்திக் கொண்டேன். எனது பெண் கழுதை என்னுடன் வந்த குழுவினர் அனைவரின் கழுதைகளையும் முந்திக் கொண்டு சென்றது. அப்பெண்கள் என்னை நோக்கி, "அபூ துவைபின் மகளே! உனக்கு என்ன நேர்ந்தது. எங்களுடன் மெதுவாகச் செல்! நீ வரும்போது பயணித்து வந்த கழுதைதானா இது?" என்றனர். நான் "அல்லாஹ்வின் மீதாணையாக! அதுதான் இது" என்றேன். அவர்கள், "நிச்சயமாக என்னவோ நேர்ந்து விட்டது" என்றனர்.

(21ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதரின் வாழ்க்கையில்

# பாடங்களும் படிப்பினைகளும்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபித்துவத்திற்கு முன்னரான வாழ்க்கைக் கட்டத்தில் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டார்கள்; எத்தகைய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்கள்; எவ்வாறு சிந்தித்தார்கள்; எவ்வாறு செயற்பட்டார்கள்; எதனை நடை முறைப்படுத்தினார்கள்; அவர்கள் ஜாஹிலிய்ய சமூகத்தில் வாழ்ந்தபோதும் வீண் அனாச்சாரங்களிலிருந்து எவ்வாறு தவிர்ந்திருந்தார்கள்; சமூகத்திலிருந்து முற்றிலும் ஒதுங்கியிருக்காது சமூகப் பணிகளில் எவ்வாறு பங்கு கொண்டார்கள்; அச்சமூக மக்களோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளம் ஏராளம்!

நபித்துவ பொறுப்பின் சுமையை சுமப்பதற்கு இளமையில் பெற்றுக்கொண்ட பயிற்சிகளும் அனுபவங்களும் அவர்களுக்கு பக்கபலமாய் அமைந்தன எனலாம். அன்னாரின் வாழ்க்கையில் அனைவருக்கும் பல முன்மாதிரிகளைக் காணலாம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் இளமைக்காலம் முழு உலகிற்கும் தலைமைத்துவம் வழங்கும் ஆளுமை மிக்கவர்களாக அவர்களைத் தயார்படுத்துவதாகவே இருந்தது எனலாம்.

**குடும்ப, சமூகப் பின்னணி**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்த சமூகம் ஜாஹிலிய்ய சமூகம் ஜாஹிலிய்யப் பண்புகள் நிறைந்த ஒரு சமூகமாக இருந்த போதும் பொதுவாக வீரம், விருந்தோம்பல், அபயமளித்தல் போன்ற பல நற்குணங்கள் அவர்களிடம் காணப்பட்டன. நபியவர்கள் ஜாஹிலிய்ய மக்களிடம் காணப்பட்ட நல்ல பண்புகளை மாத்திரம் பெற்றிருந்ததோடு அச்சமூகத்தின் தீய செயற்பாடுகளிலிருந்து முழுமையாக விலகியே இருந்தார்கள்.

**ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பு**

அக்கால அரேபிய நகர்ப்புறவாசிகள் தங்கள் குழந்தைகளுக்கு நோய் தொற்றி விடாமலிருக்கவும் அவர்கள் தூய அரபு மொழியைப் பேசப் பழகுவதற்கும் குழந்தைகளை கிராமப் புறங்களில் வளர்த்தெடுத்தனர். இந்த வகையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் கிராமம் சென்று ஆரோக்கியமானவராகவும் திடகாத்திரமானவராகவும் வளர்ந்தார்கள். கிராமப்புற இயற்கை சூழல் நல்லதொரு பயிற்சிக் களமாக அமைந்ததுடன் கிராமப்புற குழந்தைகளோடு கூடி விளையாடக்கூடிய ஓர் ஆரோக்கியமான சூழலாவும் அது காணப்பட்டது.

**அனுபவம் எனும் பயிற்சிப் பட்டறை**

சிறுவயதிலேயே நபிகளார் தனது தந்தையையும் தாயையும் இழந்து விட்டதால் பாட்டனார் அப்துல் முத்தலிபிடம் வளர்ந்தார்கள். அவர் குறைஷிகளில் மதிப்புமிக்கவராகவும் தலைவராவும் இருந்ததால் தலைமைத்துவப் பயிற்சியையும் தலைமைத்துவப் பாடங்களையும் அவரிடமிருந்து கற்றக் கொண்டார்கள். மேலும் அவர் நபிகளார் மீது அன்பு செலுத்துபவராகவும் நபிகளாரை அரவணைப்பவராகவும் இருந்தார். தான் செல்லும் சபைகளுக்கு நபிகளாரை அழைத்துச் சென்றார்கள். வழிநடத்தல் மற்றும் தலைமைத்துவ பயிற்சிகள் அவர்களுக்கு இதன் மூலம் கிடைத்தன.

**ஆடு மேய்த்தல்**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தமது இளமைக் காலத்தில் ஸஅது கிளையாரின் ஆட்டு மந்தைகளை மேய்த்து வந்தார்கள். மேலும் மக்காவாசிகளின் ஆடுகளையும் மேய்த்து வந்தார்கள். பல நபிமார்கள் ஆடு மேய்த்துள்ளார்கள். மந்தையிலுள்ள அனைத்து ஆடுகளும் ஒரே திசையில் ஒன்றாகப் பயணிக்காது. மந்தையிலிருந்து அந்த ஒழுங்கிலிருந்து விலகியேயிருக்கும். இது தலைமைத்துவத்திற்கான ஒரு பயிற்சியாகவே கருதப்படுகிறது. ஏனெனில் சமூகத்திலுள்ளவர்களும் அவ்வாறே காணப்படுவர். இந்த இறை அழைப்புக்கு அனைவரும் பதிலளிக்க மாட்டார்கள். அதனை ஏற்றுக் கொள்பவர்கள் கூட தொடர்ந்தும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கிலேயே பயணிப்பார்கள் என்று கூற முடியாது என்ற உண்மையைக் கற்றுக் கொள்ள ஆடு மேய்த்தல் என்ற பாடமும் நடைமுறைப் பயிற்சியும் நபிகளாருக்கு அனுபவமாக அமைந் தன.

**வியாபாரம்**

வாலிபமடைந்த நபியவர்கள் ஆடு மேய்ப் பதை விட்டுவிட்டு ஸாம்ப் இப்னு அபூஸாம்ப் அல்மக்ஸூமி என்பவருடன் இணைந்து வாணிபம் செய்தார்கள். இவ்வியாபாரப் பயணங்கள் மூலம் பல பிரதேசங்கள் பற்றிய புவியியல் ரீதியான தகவல்களும் பிரதேச அறிவும் அயல் நாடுகள் உலகம் தொடர்பான பரந்த அறிவும் அவர்களுக் குக் கிடைத்தது.

அதுமட்டுமன்றி பல்வேறு சமூகங்கள் பற்றிய சமூக அறிவும் பல்வேறு மக்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், கலாசாரம் பற்றிய அறிவும் இவர்களுக்குக் கிடைத்தது. இது சமூகம், மக்கள் தொடர்பான யதார்த்த நிலையைப் புரியச் செய்கின்றது. மக்களை எவ்வாறு அணுகு வது? அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வது? மக்களின் மனோநிலை யாது? இந்தத் தூதை அவர்களுக்கு எப்படி எத்திவைப்பது போன்ற அறிவைப் பெற இத்தகைய பயிற்சிகள் உதவின.

**நபிகளாருக்கு கிடைத்த சமூக அந்தஸ்து**

'அல்அமீன்', 'அஸ்ஸாதிக்' என்ற புனைப் பெயர்களுடன் வியாபாரத்தில் நம்பிக்கையுடன் நடந்து கொண்டதன் மூலம் கதீஜா என்ற செல்வச் சீமாட்டியின் நம்பிக்கையையும் வென்றெடுத்தார் கள். மக்கள் தமது பிரச்சினைகளில் ஆலோசனை கேட்கக் கூடியவராகவும் தமது பொருட்களை நம்பி அமானிதமாக ஒப்படைக்கப் பொருத்த மானவராகவும் நீதி தவறாது தீர்ப்பளிக்கக் கூடியவராகவும் அந்த சமூகத்தினால் கருதப் பட்டு மதிக்கப்பட்டார்கள். இத்தகைய சமூக நன்மதிப்பே இறைத் தூதை நம்பிக்கையோடு எத்திவைக்கச் செய்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் காணப்பட்ட நற்பண்புகளும் நேரிய ஆழ்ந்த சிந்தனையும் தொலைநோக்கும் நுண்ணறிவும் முதிர்ந்த ஞானமும் நபித்துவத்திற்கு முந்தைய சில ஆண்டுகளில் அந்த சமூகத்தைப் பற்றியும் சமூகத்தில் காணப்பட்ட பிழையான வணக்க முறைகள், தவறான பழக்க வழக்கங்கள் என்பவற்றை எவ்வாறு களைவது என்பது தொடர்பாகவும் ஆழமாக சிந்திக்கத் தூண்டின.

**சமூகப் பணிகளில் பங்கு**

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கியிருக்கவில்லை. சமூக செயற்பாடுகளில் மக்களோடு மக்களாக நின்று பணியாற்றினார்கள். ஆனால் சமூகத்தின் தீய பண்புகளிலிருந்தும் பாவமான செயற்பாடு களிலிருந்தும் முழுமையாக விலகியிருந்தனர். கஃபாவைப் புனரமைக்கும் பணிகளில் இணைந்து செயற்பட்டார்கள். மேலும் பிறருக்கு உதவி செய்யக்கூடியவர்களாகவும் விருந்தினரை உபச ரிப்பவர்களாகவும் காணப்பட்டார்கள். அத்து டன் ஹில்புல் புழூல் எனப்படும் அநீதியை ஒழித்து நீதியை நிலைநாட்டும் உடன்படிக்கையி லும் கலந்து கொண்டார்கள்.

இது தனது சமூகத்தோடு நபிகளாரை வாழச் செய்ததோடு, தான் இஸ்லாத்தின் தூதை எத்தி வைக்க வேண்டிய சமூகத்தைப் பற்றிய சிறந்த புரிதலை ஏற்படுத்தி இந்த சமூகத்தின் பரிதாப நிலைகண்டு கவலைப்படக்கூடியவராக மாற்றியது. மாத்திரமல்லாமல் அதற்கான தீர்வு என்ன என்பது பற்றியும் சிந்திக்கத் தூண்டியது.

இவை தனது சமூகத்தின் மீது நபிகளார் எந்தளவுதூரம் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதைம் சமூக விவகாரங்களோடு எவ்வளவு தொடர்புடையவர்களாக இருந்தார்கள் என்ப தையும் எமக்குப் புலப்படுத்துகிறது.

**தனிமை, ஆன்மிகப் பயிற்சி, சிந்தனைத் தெளிவு**

நபியவர்கள் தனிமையாக ஹிராக் குகைக்கு சென்று மக்களின் அவல நிலை குறித்து சிந்தித்தார் கள். இந்தத் தனிமையும் சிந்தனையும் முதலில் அவருக்கு சிந்தனைத் தெளிவையும் தெளிவான பார்வையையும் வழங்கி மனக் கட்டுப்பாட்டிற் கும் தன்னம்பிக்கைக்கும் வழி வகுத்தன.

ஆரம்ப கால கிராம வாழ்க்கை நபிகளாருக்கு உடல் ஆரோக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தது போலவே தனிமையான குகை வாழ்க்கை உள்ளத்திற்கு உற்சாகத்தையும் துணி வையும் நம்பிக்கையையும் அளித்ததுடன் சிந்த னையையும் கூர்மையாக்கியது.

இவ்வாறு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆரம்பத்தில் பெற்ற பயிற்சிகள் அல்லாஹ்வினால் சுமத்தப்பட்ட பொறுப்பை சுமக்கக்கூடியவர்களாக மாற்றின. இத்தகைய கடுமையான பயிற்சிகளும் சூழலும் முயற்சியும் அவர்களை இந்தத் தூதை சுமப்பதற் கும் அந்தப் பாரிய பணியை வெற்றிகரமாக நிறைவேற்றவும் உதவின எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 63வது சுதந்திர தினம்

# பெப்ரவரி 04, 2011

## சில ஞாபகக் குறிப்புக்கள்





நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இலங்கை, அவ்வரலாற்றுக் காலங்களில் தனித்துவத்துடனும் சிறப்புற்றும் விளங்கியது. இது இரத்தின துவீபம், சீலன் போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டது. இதன் அமைவிடம், வளம் என்பன காரணமாக இந்நாடு அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டது.

ஐரோப்பியருக்கு எழுந்த நாடு பிடிக்கும் ஆசையின் காரணமாக அவர்கள் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய நாடுகளை நோக்கிப் படையெடுத்தனர். இதன் விளைவாக முறையே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இந்நாட்டைக் கைப்பற்றினர். இதனால் இந்நாடு சுதந்திரத்தை இழந்தது. இவ்வந்நிய ஆட்சிக்கெதிராக இந்நாட்டின் சுதேசிகள் போராடியதை அடுத்து 1948 பெப்ரவரி 04ம் திகதி இந்நாட்டை ஆங்கிலேயர் விடுவித்தனர். அத்தினத்தை இந்நாடு சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறது.

443 ஆண்டுகளாக அந்நிய ஆட்சியில் இந்நாட்டின் வளங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. 1505ம் ஆண்டு பிரான்சிஸ்கோ டி அல்மேதா இலங்கையைக் கைப்பற்றியதுடன் இலங்கை போர்த்துக்கேயர் வசமானது. அவர்கள் 1517ம் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்தையும் கைப்பற்றினர்.

1602 இல் ஒல்லாந்துத் தளபதி ஜோரிஸ் வான் ஸ்பில் இலங்கையில் காலடி எடுத்து வைத்தார். அப்போது இலங்கையில் கண்டியை ஆட்சி செய்த இரண்டாம் இராஜசிங்க மன்னன் அவரிடம் உதவி கேட்டான். இதன் விளைவாக 1660இல் கண்டியைத் தவிர இலங்கையின் ஏனைய அனைத்துப் பகுதிகளும் போத்துக்கேயரால் கைப்பற்றப்பட்டன. 1796 இல் இந்நாடு ஆங்கிலேயர் வசமானது.

இவ்வாறுதான் இலங்கையின் சுதந்திரம் பறிபோனது. மதத்தைப் பரப்புவதையும் வளங்களைச் சுரண்டுவதையும் நோக்காகக் கொண்ட இவர்கள் மிஷனரிகளை உருவாக்கியதுடன் பெருமளவான இந்நாட்டின் வளங்களைச் சுரண்டினர். இந்நாட்டு மக்களுக்கு அவர்களது மதத்தைத் திணித்தனர். அவர்களது மதத்தைத் தழுவியோருக்கு ஏராளமான சலுகைகளை வழங்கினர். இந்நாட்டு பௌதிக வளங்களைச் சூறையாடிச் சென்று அவர்களது நாட்டை வளப்படுத்தினர்.

இத்தகைய அநியாயங்களுக்கெதிராக கொதித்தெழுந்த எம்முன்னோர் சாத்வீக ரீதியான போராட்டங்களை மேற்கொண்டனர். அவ்வப்போது எழுந்த இப்போராட்டங்கள் ஆங்கிலேயரால் அடக்கியொடுக்கப்பட்டாலும் அவற்றால் சுதந்திர தாகம் கொண்ட சுதேசிகளின் உணர்வுகளை அழித்துவிட முடியவில்லை. இதன் விளைவாக 1948 பெப்ரவரி 04ஆம் திகதி அந்நிய ஆட்சியிலிருந்து இந்நாடு விடுதலை பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுதந்திர இலங்கையின் பிரதமர்கள்

1) டி.எஸ். சேனநாயக்க (1947-1952)

2) டட்லி சேனநாயக்க (1952-1953)

3) சேர் ஜோன் கொத்தலாவல (1953-1956)

4) எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க (1956-1959)

5) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1960-1965)

6) டட்லி சேனநாயக்க (1965-1970)

7) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1970-1977)

8) ஜே.ஆர். ஜயவர்தன (1977-1978)

9) ரணசிங்க பிரேமதாஸ (1978-1989)

10) டி.பி. விஜேதுங்க (1989-1993)

11) ரணில் விக்கிரமசிங்க (1993-1994)

12) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க (1994-1999)

13) ரட்ணசிறி விக்கிரமநாயக்க (1999-2001)

14) ரணில் விக்கிரமசிங்க (2001-2004)

15) மஹிந்த ராஜபக்ஷ (2004-2005)

16) ரட்ணசிறி விக்கிரமநாயக்க (2005-2010)

17) டி.எம். ஜயரத்ன (2010-இன்றுவரை)

### 1972இல் இலங்கை குடியரசானதைத் தொடர்ந்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசை ஆட்சி செய்த ஜனாதிபதிகள்

1) வில்லியம் கொபல்லாவ (1972-1978)

2) ஜே.ஆர். ஜயவர்தன (1978-1989)

3) ரணசிங்க பிரேமதாஸ (1989-1993)

4) டி.பி. விஜேதுங்க (1993-1994)

5) சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (1994-2005)

6) மஹிந்த ராஜபக்ஷ (2005-இன்றுவரை)


டி.எஸ். சேனநாயக்க


டட்லி சேனநாயக்க


சேர் ஜோன் கொத்தலாவல


எஸ்.டபிள்யூ. ஆர்.டி ப.நாயக்க


ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க


ஜே.ஆர். ஜயவர்தன


ரணசிங்க பிரேமதாஸ


டி.பி. விஜேதுங்க


வில்லியம் கொபல்லாவ


சந்திரிகா பண்டாரநாயக்க


ரட்ணசிறி விக்கிரமநாயக்க


டி.எம். ஜயரத்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளார் வாழ்வினிலே...

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சிறுவயதில் நடந்த சம்பவங்கள் சில**

### நெஞ்சு திறக்கப்படுதல்

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது வானவர் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் வருகை தந்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை மயக்கமுறச் செய்து, நெஞ்சைத் திறந்து இதயத்தை வெளியே எடுத்தார். அதில் ஒட்டியிருந்த ஒரு துண்டை அகற்றிவிட்டு 'இது உம்மிடமிருந்த ஷைத்தானின் பங்காகும்' என்று கூறி, தங்கத் தட்டில் இதயத்தை வைத்து அதில் ஸம்ஸம் நீரை ஊற்றிக் கழுவினார். பிறகு அந்த இதயப் பகுதிகளை ஒன்றிணைத்து நெஞ்சினுள் திரும்பப் பதித்துவிட்டார். இதைக் கண்ட சிறுவர்கள் ஹலீமாவிடம் ஓடோடி வந்து முஹம்மது கொலை செய்யப்பட்டார் என்றனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நோக்கி அனைவரும் விரைந்தபோது அவர் நிறம் மாறிக் காட்சியளித்தார்."

மேலும் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நெஞ்சில் தைக்கப்பட்டதற்கான அடையாளத்தை நான் கண்டேன்." (ஸஹீஹ் முஸ்லிம்)



### கஅபாவின் விரிப்பில் நபியவர்கள்



புனித கஅபாவின் நிழலில் அப்துல் முத்தலிபுக்கென ஓர் விரிப்பு விரிக்கப்பட்டிருக்கும். அவர் வரும்வரை அவரது பிள்ளைகள் அந்த விரிப்பைச் சுற்றி அமர்ந்திருப்பர். அவருக்கு மரியாதை செய்யும் விதமாக எவரும் அதில் அமர மாட்டார்கள். சிறுவரான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அங்கு வந்து விரிப்பில் அமர்வார்கள். அவரை அதிலிருந்து அப்துல் முத்தலிபின் பிள்ளைகள் அகற்றிவிட முயல்வார்கள். இதை அப்துல் முத்தலிப் பார்த்துவிட்டால் "எனது அருமைப் பேரரை விட்டுவிடுங்கள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவருக்கென ஒரு தனித் தன்மை இருக்கிறது" என்று கூறி, தன்னுடன் விரிப்பில் அமர்த்தி அவரது முதுகை தடவிக் கொடுப்பார். அவரது செயல்களையும் அசைவுகளையும் கண்டு களிப்படைவார். (இப்னு ஹிஷாம்)

### மாநபிக்காக மழை பொழிதல்

ஜல்மா இப்னு உர்ஃபுதா கூறுகிறார்:

"கடும் பஞ்ச காலத்தில் நான் மக்கா சென்றேன். கணவாய்கள் வரண்டு விட்டன. பிள்ளைக் குட்டிகள் வாடுகின்றனர். வாருங்கள்! மழை வேண்டி பிரார்த்தனை செய்யுங்கள் என்று குறைஷியர்கள் அபூதாலிபிடம் கூறினர். அவர் வெளியேறி வந்தார். அவருடன் மேகம் மறைக்காத சூரியனின் பிரகாசமுடைய ஒரு சிறுவரும் இருந்தார். மேலும், சிறுவர்கள் பலர் அபூதாலிபைச் சுற்றிலும் இருந்தனர்.

அபூதாலிப் அச்சிறுவரை தூக்கி அவரின் முதுகை சேர்த்து வைத்து பிரார்த்தித்தார். அபூதாலிபின் தோள் புஜத்தை அச்சிறுவர் பற்றிக் கொண்டார். மேகமற்றுக் கிடந்த வானத்தில் அங்கும் இங்குமிருந்து மேகங்கள் ஒன்று திரண்டன. பெரும் மழையால் கணவாய்களில் வெள்ளம் கரை புரண்டோடியது. மக்கா நகரும் அதன் சுற்றுப்புறங்களும் பசுமையாக மாறின."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவி பஹீராவின் முன்னறிவிப்பு

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு 12 வயதாகும் போது அபூதாலிப் வியாபாரத்திற்காக 'ஷாம்' தேசம் சென்றார். அப்போது நபியவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். அவர்கள் ஷாம் நாட்டின் புஸ்ரா நகரை வந்தடைந்தனர்.

அங்கு 'பஹீரா' என்ற பிரபலமான துறவி ஒருவர் இருந்தார். அவரது பெயர் 'ஜர்ஜீஸ்' என்று சொல்லப்படுகிறது. அவர் எங்கும் வெளியில் செல்ல மாட்டார். எனினும், இந்த வியாபாரக் கூட்டம் புஸ்ரா சென்றதும் அவர்களை சந்திக்க வந்தார். வணிகக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு வந்து சிறுவரான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கரத்தைப் பற்றிக் கொண்டு, "இதோ உலகத்தாரின் தலைவர்! இதோ உலகத்தாரின் இறை தூதர்! இவரை அல்லாஹ் அகிலத்தாருக்கு அருட் கொடையாக அனுப்புவான்" என்று கூறினார். அவரிடம் அபூதாலிபும் குறைஷிப் பெரியவர்களும் "இது எப்படி உமக்குத் தெரியும்?" என வினவினர்.

அதற்கு அவர் "நீங்கள் கணவாய் வழியாக வந்தபோது கற்களும் மரங்களும் சிரம்பணிந்தன. அவை இறைத் தூதர்களுக்கே தவிர வேறு எவருக்கும் சிரம்பணிய மாட்டா. மேலும், அவரது புஜத்துக்குக் கீழிருக்கும் ஆப்பிளைப் போன்ற இறுதித் தூதரின் முத்திரையைக் கொண்டும் நான் அவரை அறிவேன். எங்களது வேதங்களில் அதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது" என்று கூறினார்.

பிறகு அவர்களுக்கு விருந்தளித்து உபசரித்தார். "இச்சிறுவரை ஷாமுக்கு அழைத்துச் சென்றால் அங்குள்ள ரோமர்கள் மற்றும் யூதர்களால் இவருக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, இவரை இங்கிருந்தே மக்கா திருப்பி அனுப்பி விடுங்கள்" என்று பஹீரா அபூதாலிபிடம் கூறினார். அதற்கிணங்க அபூதாலிப் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை சில வாலிபர்களுடன் மக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

(ஸுனனுத் திர்மிதி, அத்தபரி, முஸன்னஃப் அபீஷைபா, இப்னு ஹிஷாம், பைஹகி)

## அகிலத்திற்கோர் அருட்கொடை

(19ஆம் பக்க தொடர்ச்சி)

எங்களது ஊருக்குத் திரும்பினோம். அல்லாஹ்வின் பூமியில் எங்களது பகுதியைப் போன்றதொரு வறண்ட பூமியை நான் கண்டதில்லை. ஆனால், மேய்ச்சலுக்குச் செல்லும் எனது ஆடுகள் மாலையில் வீடு திரும்பும்போது கொழுத்து மடி சுரந்து திரும்பும். அதைக் கறந்து அருந்துவோம். எங்களைத் தவிர வேறு எவரும் தங்களது ஆடுகளில் ஒரு துளிப் பால் கூட கறக்க முடியாது. அவர்களது ஆடுகளின் மடிகள் வரண்டிருந்தன.

எங்கள் சமூகத்தில் அனைவரும் தங்களது இடையர்களிடம் உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் ஹலீமாவின் இடையர் மேய்க்கும் பகுதிகளுக்குச் சென்று மேய்த்து வாருங்கள்! என்று சொல்வார்கள். இருப்பினும் எனது ஆடு வயிறு நிரம்பி மடி சுரந்து வரும்போது அவர்களுடைய ஆடுகள் வயிறுகள் ஒட்டிப் போய் காய்ந்த மடியுடன் திரும்பி வந்தன. இவ்வாறு அக்குழந்தைக்கு பால்குடி மறக்கடிக்கும் வரையிலான இரண்டு வருடங்கள் வரை அல்லாஹ்விடமிருந்து பல நன்மைகளையும் வளங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தோம்.

இரண்டு வயதில் ஏனைய குழந்தைகளை விட மிக உறுதியாகவும் வலிமையாகவும் அக்குழந்தை வளர்ந்திருந்தது. அவரிடமிருந்து ஏராளமாக நன்மைகளை நாங்கள் அனுபவித்துக் கொண்டிருந்ததால் அவரை எங்களுடன் தங்க வைத்துக் கொள்ள மிகுந்த ஆவல் கொண்டோம். எனினும், தவணை முடிந்து விட்டமையால் அவரது தாயாரிடம் அழைத்துச் சென்றோம். அவரது தாயாரிடம் "இந்த அருமைக் குழந்தை இன்னும் திடகாத்திரமாக வளரும் வரை என்னிடமே விட்டு விடுங்கள். மக்காவில் ஏதேனும் நோய் அவரைப் பீடித்து விடுமென நான் அஞ்சுகிறேன்'' என்று கூறினேன். எனது தொடர்ச்சியான வற்புறுத்தலால் குழந்தையை என்னிடமே ஒப்படைத்து விட்டார்.

**(இப்னு ஹிஷாம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: ஹாஜிமா ஜெஸீமா ஆதம் லெவ்வை (Bsc, C.P.O retired)
தேசிய கல்வி நிறுவகம்

## உயிரியல்

### தேர்ச்சி மட்டம் 1.3

அமைப்புக் கட்டுரை வகை வினாக்கள்

(01) உடற்றொகுதிகள் அனைத்திற்குமிடையே இடைத் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் தொழிற்பாடுகளை நீண்டகால இயைபாக்கத்திற்கு ஆளுகை செய்வது அகஞ்சுரக்கும் தொகுதியாகும்.

i. அகஞ்சுரக்கும் சுரப்பிகளின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(அ) ..............................................................

(ஆ) ..............................................................

ii. பின்வரும் சுரப்பிகளிலிருந்து சுரக்கப்படுவனவற்றை எழுதுங்கள்.

| சுரப்பி | சுரப்பு |
|---|---|
| (அ) கேடயச் சுரப்பி | |
| (ஆ) இலங்ககான் சிறு தீவுகள் | |
| (இ) சூலகாங்கள் | |
| (ஈ) விதைகள் | |
| (உ) அதிரனல் சுரப்பி | |

iii. சுகதேகியான மனிதரில் 100 கன அளவுக் குருதியில் காணப்படவேண்டிய குளுக்கோசின் அளவு யாது?

iv. இழையப்பாய பொருளில் நீரின் சதவீதம் குறைவடையும் போது அகச்சூழலின் சமநிலை எவ்வாறு பேணப்படுகின்றது?

..............................................................

..............................................................

..............................................................

(02) i. பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

(அ) இழையப் பாய்பொருளின் குளுக்கோசு மட்டம் ..................போது சதையியினால் .................................... சுரக்கப்படும்.

(ஆ) ஈரலினுள் அந்த ...................... மேலதிகமான குளுக்கோசை ............ ஆக மாற்றி சேமிக்கின்றது.

(இ) இழையப்பாய் பொருளின் குளுக்கோசின் மட்டம்...............................போது, சதையி .................. ஓமோனைச் சுரக்கும்.

(ஈ) இவ்வோமோன்............குளுக்கோசாக மாற்றிக் குருதிக்குள் சேர்க்கின்றது.

ii. புறச் சூழலின் வெப்பநிலை குறைவடையும் போது உடல் அதற்குக் காட்டுகின்ற இயைபாக்கத்தை வரிசைப்படுத்துங்கள்.

iii.

(அ) கழுத்தில் வாதனாளிக்கு இரு புறமும் அமைந்துள்ள இரு சோணைகளைக் கொண்ட சுரப்பி எது?

(ஆ) இதன் சுரப்புக்கு கனியுப்பு ஒன்று அவசியமாகும். அக்கனியுப்பு யாது?

(இ) அக்கனியுப்புக் குறைபாட்டு நோய் நிலைமை எவ்வாறு அழைக்கப்படும்?

(ஈ) இச் சுரப்பியினால் சுரக்கப்படும் ஓமோனினது தொழிற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுங்கள்.

(03)

i திடீரெனப் பாம்பைக் கண்ட ஒருவர் அந்நிலைமையை எதிர்கொள்ள எவ்வாறு உடலை ஆயத்தமாக்குவார்?

ii. கபச்சுரப்பியின் அமைவிடத்தை விபரியுங்கள்.

iii. கபச்சுரப்பியின் தொழிற்பாடுகள் 3ஐக் கூறுங்கள்.

iv. ஒரு சீர்திட நிலை என்றால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. உமிழ்நீர்ச் சுரப்பிக்கும் அதிரினல் சுரப்பிக்கு மிடையில் காணப்படுகின்ற பிரதான வேறுபாடுகள் யாவை?

(அ) ..........................................................

(ஆ) ..........................................................

### கட்டுரை அமைப்பு வினாக்கள்

1) இரசாயன இயைபாக்கம் என்றால் என்ன? அவை நிகழ்த்தப்படுகின்ற சுரப்பிகளையும் அவற்றிற்குரிய தொழிற்பாடுகளையும் பட்டியல் படுத்துங்கள்.

2) உடலின் குளுக்கோசுச் சீராக்கம் நிகழ்த்தப்படுகின்ற முறையை அட்டவணை அல்லது பாய்ச்சல் கோட்டுப் படத்தை உபயோகித்து விபரியுங்கள்.

### விடைகள்

(01)

i.

(அ) ஓமோன் இரசாயனப் பதார்த்தத்தைச் சுரத்தல்.

(ஆ) கான்களில்லை.

(இ) நேரடியாக குருதிக்குள் விடப்படும்.

ii. (அ) தைரொக்சின்

(ஆ) இன்சுலின், குளுக்காகோன்

(இ) ஈஸ்ரஜன், புரோசெஸ்திரோன்

(ஈ) தெஸ்தெசுத்தரோன்

(உ) அதிரனலின், நோஅதிரனலின்

iii. 90 மில்லிகிராம் குளுக்கோசு

iv. ஏ.டி.எச்.ஓமோன் தொழிற்பட சிறுநீரகங்கள் மீண்டும் நீரை அகத்துறிஞ்சுகின்றன. இதனால் சிறுநீரின் அளவு குறைக்கப்படுகின்றது.

(02)

i. (அ) அதிகரிக்கும், இன்சுலின்

(ஆ) இன்சுலின், கிளைக்கோசனாக

(இ) குறைவடையும், குளுக்காகோன்

(ஈ) கிளைக்கோசனை

ii. வெப்ப பரிவகக்கீழின் தூண்டலால் தோலின் குருதிக் கலன்கள் சுருங்கும்.

- குருதிக் குறைவால் வெப்ப இழப்பு குறைகின்றது.
- வியர்வை உருவாக்கம் குறையும்.
- மயிர்கள் நிமிரும்.
- காவலிப்படையாக வளி அடக்கப்படும்.

iii. (அ) கழுத்தில் வாதனாளிக்கு இரு புறமும் அமைந்துள்ள இரு சோணை தைரொயிட்டு அல்லது கேடயச் சுரப்பி

(ஆ) அயடின்

(இ) கண்டமாலை அல்லது கண்டக் கழலை

- அனுசேப வீதத்தை அதிகரித்தல்.
- புரதத் தொகுப்பு

(03)

i. அதிரினலின் தூண்டலால் இதயத் துடிப்பு வீதம் கூடும். குருதிக்குள் குளுக்கோசு அதிகரிக்கும். மேலதிக சக்தி உருவாகும்.

ii. மூளையின் பரிவகக்கீழில் காம்பொன்றால் தொங்கிக் கொண்டிருக்கும்.

iii. தைரொக்சின் சுரப்பைக் கட்டுப்படுத்தல்.

- சூல் புடைப்பைத் தூண்டல்.
- முலைச் சுரப்பியைத் தூண்டல்.
- உடல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல்.

iv. உடற் கலங்களும் இழையப் பாயமும் கொண்ட அகச்சூழல் நியம நிலையில் பேணப்படுவது குளுக்கோசு செறிவு, நீர்ச் செறிவு, வெப்பநிலை என்பன.

v.

| உமிழ் நீர்ச் சுரப்பி | அதிரினல் சுரப்பி |
|---|---|
| (அ) கான் உண்டு | கான் இல்லை |
| (ஆ) நொதியச் சுரப்பு | ஓமோன் குருதிக்குள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் அஹ்மத் ஷவ்கி

கவிஞர்கள் பிறப்பதில்லை; உருவாகுகிறார்கள் அல்லது உருவாக்கப்படுகிறார்கள் என்று பொதுவாக சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். உண்மைதான். அவர்கள் கவிஞர்களாக பிறக்காவிடினும் அவர்களது கவிதைகளுக்கென்றொரு பிறப்பு, அதன் தொடர் நிகழ்வுகள் என்று பல விடயங்கள் இருக்கவே செய்கின்றன.

அஹ்மத் ஷவ்கி பிறந்தார்; வாழ்ந்தார்; இறந்தார் என்று இல்லாமல் இன்றளவில் பேசப்படுவதற்கு அவர் கவிஞராக இருந்தார் என்பதே முதன்மை காரணியாகும். வெறுமனே கவிஞன் என்ற ஒரு சொல்லை வைத்து, எங்களுக்கு தெரிந்த கருத்தைக் கொண்டு அவரைப் பார்ப்பதை விட கவிஞர் என்றால் யார் என்பது பற்றி அறிந்து நோக்குவது பயன்தரும் எனக் கருதுகின்றேன்.

"சொல்பவனாக,
பெயரிடுபவனாக,
அழகைப் பிரதிபலிப்பவனாக,
அனைவர் மத்தியிலும் வீற்றிருக்கும்
ஓர் அரசனாகக் கவிஞன் இருக்கின்றான்"

-எமர்ஸன்-

1868ஆம் ஆண்டு கெய்ரோ நகரிலே செல்வமிகு குடும்பத்திலே அஹ்மத் ஷவ்கி பிறந்தார். அஹ்மத் ஷவ்கி இப்னு அஹ்மத் ஷவ்கி என்பது அவரது முழுப் பெயராகும். பிறந்த நான்காவது ஆண்டு திண்ணைப் பள்ளிக்கூடத்திலே இணைந்த அவர் பின் ஆரம்ப, உயர் நிலைப் பள்ளிகளிலே சேர்ந்து கல்வி கற்றார். அக்காலத்திலே பல்வேறுபட்ட மக்களின் குழந்தைகளோடு பழகும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. உயர்தரப் பாடசாலை வாழ்க்கை கழிந்ததும் அவரது நாட்கள் மீண்டும் செல்வத்தில் புரண்டன.

1885ல் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு தந்தையின் விருப்பத்திற்கிணங்க சட்டக் கல்லூரியிலே சேர்ந்தார். அங்கே மொழிபெயர்ப்புக் கலைத் துறையில் தமது படிப்பைத் தொடர்ந்தார். அங்கே அரபு மொழிப் பேராசிரியர் முஹம்மத் அல்பஸ்ஸுய்யூனி அவர்களது நெருங்கிய தொடர்பு அவருக்குக் கிட்டியது. இளமையில் கவிதை ஆற்றல் பெற்றிருந்த ஷவ்கி அவரது வழிகாட்டலால் தன்னை வளப்படுத்தத் தொடங்கினார். ஏனெனில் அவரும் ஒரு சிறந்த கவிஞராக அன்று விளங்கினார்.

1887இல் சட்டக் கல்லூரியிலிருந்து வெளியேறிய ஷவ்கி நாட்டின் தலைவராயிருந்த தௌபீக் பாஷாவின் அரண்மனையில் தங்கியிருந்து பணியுரியும் வாய்ப்பைப் பெற்றார். பின்னர் சட்டக் கலை கற்க பிரான்ஸ் சென்ற ஒரு குழுவினரில் ஷவ்கியும் அங்கத்துவம் பெற்றார். பிரான்ஸில் பட்டப் படிப்பை முடித்த அவர் அதன் தலைநகர் பாரிஸுக்கும் சென்று இரண்டு வருடம் கல்வி கற்றார். அங்கே பிரெஞ்சு மொழி இலக்கியத்துடன் நன்கு பரிச்சயமானார். அவருக்கு அங்கே விக்டர் ஹியூகோ, டீமோஸியா, லாபோன்டின், லாமாட்டின் போன்ற இலக்கிய மேதைகளின் படைப்புக்கள் அறிமுகமாகின. அவற்றில் சிலவற்றை மொழி பெயர்த்தார். பின் அங்கிருந்து இங்கிலாந்துக்கு விஜயம் செய்து நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய ஷவ்கி, பிரெஞ்சு மொழிப் பகுதியின் தலைவராக அரண்மனையில் அமர்த்தப்பட்டார். திடீரென்று அரசர் அப்பாஸின் சொந்தக் கவிஞராக மாறி விட்ட அவருக்கு தன் திறமையைக் காட்ட பல சந்தர்ப்பங்கள் கிட்டின. இதனால் அவரது புகழ் நாடெங்கும் பரவத் தொடங்கியது. இவரது பிற்பட்ட கவி வாழ்வு அரசியலோடு சேராது இஸ்லாமிய போதனைகளை முன்வைப்பதாகவே அமைந்தது என்பது இங்கு குறிப்படத்தக்க ஒன்றாகும்.

அரசவைக் கவிஞராக இருந்த அந்தக் காலத்தில்தான் கலைப் பொருத்தப்பாடுகளுடன் கூடிய செல்வந்தப் பெண்ணை மணந்தார். இந்த திருமண பந்தத்தால் அலி, ஹஸன், ஆமினா என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1896ஆம் ஆண்டு கீழைத்தேயவாதிகளின் மாநாட்டில் எகிப்தின் ஏகப்பிரதிநிதியாக கலந்து கொண்டார். நாடாளுமன்ற முறை 1924இல் ஏற்பட்ட பொழுது ஷவ்கி மேல் சபை உறுப்பின ராக தெரிவு செய்யப்பட்டார். இதற்கு முன்னர் முதலாம் மகா யுத்த கொந்தளிப்புக் காலங்களில் ஆங்கிலேயரால் ஷவ்கி நாடு கடத்தப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

*1930ஆம் ஆண்டு கடுமையான நோய் அவரைப் பீடித்திருந்தாலும் தன் துறையை விட்டுவிடவில்லை. அவர் தன் இறுதிக் காலத்தில் இமாம் ஹுஸைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சரித்திரத்தைப் படித்துக் கொண்டிருந்த தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து பீடித்திருந்த நோய் அவரை 1932ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இறையடி சேரச் செய்தது.*

*இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.*

"மரணம் மதிப்புமிக்கது. மரணம் முற்றுப் புள்ளியல்ல."

**எம்.வை.எம். சிபான், தெல்தோட்டை**

# அகரத்தின் வினா-விடைப் போட்டி-02

முதலாம் பரிசு: பாத்திமா மிஸ்பா,
73/B உடுதெனிய, தல்கஸ்பிட்டிய, அரநாயக்க

**வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான நூல்கள், இறுவட்டுக்கள் வழங்கப்படும்.**

(உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி, பெப்ரவரி 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி
அகரம்
வினா-விடைப் போட்டி
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

## வினாக்கள்

1. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மேய்த்த ஆடுகள் யாருடையவை?
2. ஹில்ஃபுல் ஃபுழூல் ஒப்பந்தம் எம்மாதத்தில் இடம்பெற்றது?
3. எம்மால் நேரடியாகக் காணமுடியாத சந்திரனின் மறுபக்கத்தை படமெடுத்த விண்கலத்தின் பெயர் என்ன?
4. டாக்டர் காரி மில்லர் எத்தனையாம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார்?
5. எல் நினோ எத்தனை வருடங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெறும்?
6. 'சிராஜுன்' என்றால் என்ன?
7. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
8. உலகின் மிக நீளமான குகை எது?
9. கிராமாபோனைக் கண்டுபிடித்தவர் யார்?
10. கவிஞர் அஹ்மத் ஷவ்கி மரணித்த ஆண்டு?

## *பரிசில் பெறுவோர்:*

1. பாசில் முஹம்மத், அக்குரனை
2. ஏ.சி.எம். முஸ்தனிம், புத்தளம்
3. எம்.எப். ஷைமா, ஹபுகஸ்தலாவ
4. எம்.ஏ.எப். அஸ்கா, வெலம்பொட
5. எம்.ஆர்.எப். நிஸ்மா, வெலம்பொட
6. ஜுவைரியா முபாரக், நாவலப்பிட்டிய
7. எம்.இஸட். நுசைபா, உலப்பனை
8. எம்.ஜே. அஹமட் கைஸ், மாவடிச்சேனை- 05, வாழைச்சேனை
9. ஏ.எச். அனாப், மாவடிச்சேனை- 05, வாழைச்சேனை
10. ஏ.ஆர். பிஷ்ரி அஹமட், அக்கரைப்பற்று- 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### 10ஆம் தரம்

*01.* பின்வரும் இடங்களை இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

A. ஜம்புகோளப் பட்டினம்
B. நல்லூர்
C. ஊராத்தோட்ட
D. மாந்தை
E. தம்பபண்ணி
F. கோகர்ண
G. அநுராதபுரம்
H. மிகிந்தல
I. புலத்திநகர்
J. மகியங்கன
K. செங்கடகல
L. வெல்லஸ்ஸ
M. கதரகம
N. மகாகம
O. தீகவாபி

*02.* i. A என்ற எழுத்தில் குறிப்பிடப் படும் நபரின் பெயர் என்ன?



A

ii. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

iii. அவர் வரலாறுக்குக் கொடுத்த வரைவிலக் கணம் என்ன?

iv. B என்ற எழுத்தினால் குறிப்பிடப்படும் வரை படத்தை வரைந்தவர் யார்?



B

v. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

*03.* கி.மு 6ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த இராச்சியங்களின் தலைநகரங்களைத் தருக.
i. மகதம் ii. வத்சயம் iii. அவந்தி

### 11ஆம் தரம்

*01.*

i. ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்ற விரும்பியமைக்கான காரணங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

ii. *1803*ஆம் ஆண்டு படையெடுப்புக்கான காரணங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

iii. *1815*ஆம் ஆண்டு படையெடுப்பு வெற்றி பெற்றமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. *1848* கிளர்ச்சிக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

### தரம் 10க்கான விடைகள்

*(01)*




*(02)*
i. ஹெரடோதஸ்
ii. கிரேக்கம்
iii. ஆராய்ச்சிகளின் விளை வாகப் பெறப்பட்டிருக் கும் தகவல்கள்.
iv. கிரேக்கம்
v. தொலமி

*(03)*
i. பவுளும நகரம்
ii. கௌசம்பி
iii. உஜெனி

### தரம் 11க்கான விடைகள்

i. (அ) திருகோணமலைத் துறைமுகம்
(ஆ) வாசனைத் திரவியங்கள்
(இ) சமயத்தைப் பரப்புதல்.

ii. (அ) வர்த்தகப் பொருட்களைப் பெறுதல்.
(ஆ) பாதுகாப்புச் செலவைக் குறைத்தல்.
(இ) கொழும்பு-திருகோணமலை வீதிக்கு அனுமதி வழங்க மறுத்தமை.
(ஈ) புத்தளத்திலிருந்து கண்டிக்கு சென்ற வர்த்தகர்களைக் கொடுமைப்படுத்தி யமை.

iii. <u>பிறவுண்றிக்கின் திறமை:-</u>

ஆளுநர் பிறவுண்றிக் தனது இராஜ தந்திரத் தைப் பயன்படுத்தி கண்டியைக் கைப்பற்றினார். ஜோன் டொவிலி என்பவரைக் கண்டிக்கு அனுப்பி கண்டியின் இயற்கைத் தோற்றம், படை பலம் என்பவற்றை அறிந்து கொண்டார். ஜோன் டொவிலி கண்டி மன்னனை மதுவுக்கு அடிமை யாக்கினார். வெளிநாட்டு மது வகைகளை மன்னனுக்கு வழங்கி மன்னனைத் தனது கைப் பொம்மையாக மாற்றினார். 1815 படையெடுப்பு வெற்றி பெற்றமைக்கு ஆளுநரான இவரின் திறமைகளில் உள்ள வேறுபாடுகளே காரணங் களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரதானிகள் அரசனை எதிர்த்தமை:-

1803ஆம் ஆண்டு படையெடுப்பின்போது அரசனுக்கு ஆதரவாக இருந்த பிரதானிகள் 1815இல் மன்னனை எதிர்த்து நின்றனர். இதன் காரணமாக மன்னன் பலவீனமடைந்திருந்தான். முன்பு கண்டி இராச்சியத்தில் மன்னனுக்கு அடுத்து பிரதானிகளே செல்வாக்குப் பெற்றிருந்தனர். எனினும், இறுதி மன்னர்கள் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இதனால் நாயக்க வம்சத்தைச் சேர்ந்த மன்னரின் உறவினர்கள் இலங்கைக்கு வந்து அதிசெல்வாக்குடன் விளங்கினர். இதனால் பிரதானிகள் மன்னன் மீது அதிருப்தி அடைந்தனர். எகலப்பொல மன்னனை எதிர்த்தமைக்கு இதுவே காரணம். 1815.2.18இல் எகலப்பொலவும் அவனது ஆதரவாளர்களும் மன்னனைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.

### iv. பாழ் நிலச் சட்டம்:-

ஆங்கிலேயர் பெருந்தோட்டச் செய்கை மேற்கொள்ள விரும்பினர். அதற்கு அதிக காணிகள் தேவைப்பட்டன. காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாழ் நிலச் சட்டத்தை (தரிசு நிலச் சட்டம்) 1840இல் கொண்டு வந்தனர். இதன்படி பயிர் செய்யப்படாத எல்லாக் காணிகளும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகின. இதன் காரணமாக கண்டிச் சிங்களவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கினர். விறகு எடுத்தல், மந்தை மேய்த்தல் முதலியன அவர்களுக்குப் பிரச்சினைகளாக மாறின. இதனால் விவசாயிகள் 1848 கிளர்ச்சியில் பங்குகொண்டு ஆங்கிலேயருக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

### கம்சபா ஒழிக்கப்பட்டமை:-

நீண்ட காலமாக இலங்கையில் கம்சபா முறை இருந்து வந்தது. கிராம மக்கள் தமது பிரச்சினைகளை கம்சபா மூலம் தீர்வு கண்டனர். ஆனால் கோல்புறூக் குழுவினரோ அந்த கமறன் கம்சபா முறையை நீக்கி இங்கிலாந்தில் உள்ள நீதிமன்ற முறைமையை அறிமுகப்படுத்தினர். இதன் காரணமாக கிராம மக்கள் நீதிமன்றங்களுக்காக நகரங்களுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அதிக பணமும் காலமும் அவர்களுக்கு வீண்விரயமாகியது. கிராமத்தின் அடிப்படையாக விளங்கிய கம்சபா முறையை இல்லாமலாக்கியது 1848 கிளர்ச்சிக்கு முக்கிய காரணியாகும்.

### லா நினோவும் காலநிலை மாற்றமும்

(39ஆம் பக்க தொடர்ச்சி)

வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பமான சிறிது காலத்தில் இலங்கையின் காலநிலையில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டன. இதுபற்றி வானிலை அவதான நிலைய பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஆர். ஜயசேகர குறிப்பிடுகையில்:

"தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள சிலி, பெரு நாடுகளுக்கு அப்பாலுள்ள கிழக்கு பசுபிக் கடல் பிராந்தியத்தின் மேற்குப் பகுதியில் வழமையாக நிலவுகின்ற வெப்பநிலையில் திடீரென வீழ்ச்சி ஏற்பட்டு அப்பகுதி ஊடாக வீசுகின்ற காற்றின் வேகமும் குறைவடைந்துள்ளது. இதன் தாக்கம் காரணமாகவே இலங்கையின் காலநிலையில் திடீரென மாற்றம் ஏற்பட்டிருக்கிறது" என்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் எம்.ஏ.எம். இஸ்திகார் தனது கட்டுரையில்,

"கிழக்கு மாகாணம் சார்ந்து தாழ் அமுக்கம் நிலைகொண்டு விரிவடைந்துள்ளதால் வழமைக்கு மாற்றமான முறையில் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் தொடர்ச்சியான மழைவீழ்ச்சியையும் அதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் சுமார் 100 வருடங்களிற்குப் பிறகு 300 மி. மீற்றர்களையும் தாண்டிய (341மி.மீ) மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்று பெரு வெள்ளமும் ஏற்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

"இலங்கையில் கடந்த சில தினங்களாக வெப்பநிலையில் குறைவு ஏற்பட்டு வழமைக்கு மாற்றமான முறையில் கடும் குளிரும் பனிமூட்டமும் காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலைக்கு சுமார் 82 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை உட்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


இதனால் இலங்கையில் குறிப்பிட்ட இந்த காலத்திற்குரிய குளிர்ச்சி மற்றும் லா நினாவின் தாக்கம் காரணமாக தீவின் குறிப்பிட்ட சில நகரங்கள் தவிர அனேக நகர்களில் வெப்பநிலை 20 பாகையை விட குறைவாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

தற்போது நுவரெலியா, கண்டி போன்ற மத்திய மாகாணப் பிரதேசங்களில் மாத்திரம் அன்றி கொழும்பு, காலி, மாத்தறை, அம்பாறை, மட்டக்கப்பு. அனுராதபுரம், யாழ்ப்பாணம் என நாட்டின் சகல பாகங்களிலும் மக்கள் கடும் குளிரையும் மப்பும் மந்தாரமு மான ஒரு நிலையினையும் முழு நாளும் அனுபவித்து வருகின்றனர்."



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிக்கோளை வரையறுத்தல்



# (Goal Setting)

**ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)**

குறிக்கோள் அல்லது இலக்கு மனித வாழ்க்கையில் முக்கியமான அம்சமும் வெற்றியின் ஆரம்பப் புள்ளியுமாகும். நாம் எமக்கென ஒரு குறிக்கோளை வரையறுத்து வாழ முற்படுகின்றபோதுதான் எமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறுகின்றது. எந்தவொரு நோக்கமுமில்லாமல் வாழ்வது கண்களை மூடிக்கொண்டு ஒரு பாதையில் பயணிப்பதற்கு ஒப்பானதாகும்.

இலக்குகளை வரையறுத்துக் கொள்கின்ற செயன்முறை நாம் வாழ்க்கையில் பயணிக்க வேண்டிய பாதையையும் அடைய வேண்டிய இலக்கையும் தெரிவு செய்வதற்கு துணையாக அமைகின்றது. பொதுவாக இளைஞர்களைப் பொறுத்தவரையிலும் குறிப்பாக மாணவர்களைப் பொறுத்தவரையிலும் 'குறிக்கோளை வரையறுத்தல்' என்ற செயற்பாடு தவிர்ந்திருக்க முடியாத முக்கியமானதொரு விடயமாகும். நாம் எதைச் சாதிக்க வேண்டும் என்ற இலக்கின்றி வாழும் ஒரு மாணவனுடைய வாழ்க்கை நடுக்கடலில் திக்குத் திசையறியாது பயணிக்கின்ற ஒரு கப்பலைப் போன்றதாகும்.

உங்களது ஊரில் மிகப் பிரபல்யமான இரு அணிகளுக்கு மத்தியில் நடைபெறும் மிக முக்கியமானதொரு காற்பந்தாட்டப் போட்டியைக் கண்டு மகிழ நீங்களும் உங்களுடைய நண்பர்களும் மைதானத்திற்குச் செல்கிறீர்கள். அங்கு போட்டி ஆரம்பித்து மிக விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கிறது. இரு அணிகளின் வீரர்களும் அதிகமான கோல்களைப் போட்டு போட்டியில் வெற்றிபெற வேண்டுமென்ற அவாவுடன் தத்தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அணியின் முன்னணி வீரர் பந்தை அடுத்த அணியின் திசைநோக்கி மிக வேகமாகத் தடைகளைத் தாண்டி எடுத்துச் செல்கிறார். இப்போது அவருக்குத் தடுமாற்றம்! அந்த இடத்திற்கப்பால் பந்தை எங்கு நகர்த்துவதென்று அவரால் தீர்மானிக்க முடியவில்லை. காரணம் கோல் கம்பம் அங்கு காணப்படவில்லை. அடுத்த அணியின் பக்கமும் இதே நிலைதான். இதனால் பந்தை எந்தத் திசையை நோக்கி நகர்த்துவதென்றறியாது வீரர்கள் மைதானத்தில் பந்துடன் அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்கள். இறுதியில் களைப்படைந்த வீரர்கள் நிராசையுடனும் ஏமாற்றத்துடனும் மைதானத்தை விட்டு வெளியேறிச் செல்ல நேர்கிறது. கோல் கம்பம் என்ற இலக்கு இருந்திருந்தால் அந்த உதைப்பந்தாட்ட வீரர்கள் ஏமாற்றம் கண்டிருக்க மாட்டார்கள்.

இதுபோலவே ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆசையும் வேட்கையும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இதைத்தான் நான் சாதிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற குறிக்கோள் இல்லாது தமது நேரத்தையும் சக்தியையும் வீணாகச் செலவு செய்வது அர்த்தமற்றது. சிறிய வயதிலிருந்தே இதுதான் எனது குறிக்கோள் என்று வரையறுத்துச் செயற்பட முனைந்தால் அந்த வாழ்வு இலட்சிய முள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் பிரயோச னங்கள் நிறைந்ததாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை.

குறித்த ஓர் இலக்கை நோக்கிப் பயணிக்கும் போதுதான் இப்பாதையில் எதிர்கொள்ள வேண் டிய சவால்கள், தடைகளை விரைவில் சரியாக இனங்கண்டு கொள்ளவும் அவற்றை எளிதில் கடந்து தமது முன்னேற்றப் பாதையில் செல்லவும் இயலுமாக இருக்கும். இல்லையெனில் ஏதாவது ஒரு விடயத்தைத் தொடங்கி அதில் பயணிக் கின்ற வேளையில் அப்பாதையில் ஏற்படும் சிறியதொரு தடங்கல்கூட பெரும் தடையாக அமைந்து "இது மிகவும் கஷ்டமான வேலை; வேறு ஒரு விடயத்தை யோசிப்போம்" என்று நம்பிக்கையிழக்கச் செய்து அப்பாதையில் நிலைத்து நிற்க முடியாமல் எம்மைத் தோல்வி யடையச் செய்து விடும்.

ஒருவரிடம் உமது எதிர்கால வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறீர் கள் எனக் கேட்டால் அவர், "நிம்மதியாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும்" என்று பதில் கூறுவதை அவதானிக்கலாம். ஒருவர் தனது வாழ்க்கையை இரண்டு விதமாக வாழ முடியும்.

1. வாழ்க்கையை அது அமைவது போன்று ஏற்றுக் கொள்வது.
2. வாழ்க்கையை நாம் விரும்புவது போன்று அமைத்துக் கொள்வது.

**1. வாழ்க்கையை அது அமைவது போன்று ஏற்றுக் கொள்வது**

நாளைய நாள் எமக்கு எத்தகைய வெகுமதி களைக் கொடுக்கப் போகிறது என்பதைக் கண்டுகொள்வதற்காகக் காத்திருக்கிறோம். நாளைய நாள் இன்பம் நிறைந்ததாகவும்; இருக்கலாம், துன்பம் நிறைந்ததாகவும் இருக்க லாம். அதை எங்களால் அறிய முடியாது. இங்கு வாழ்க்கையில் வெறுமனே அதிஷ்டங்களை மாத்திரம் நம்பக்கூடியவர்களாகவே இருப் போம். அதே போல் அமையும் வாழ்க்கையோடு திருப்தியுறுவோம்.

**2. வாழ்க்கையை நாம் விரும்புவதுபோன்று வாழ்தல்**

இவ்வாழ்க்கையில் எமது எதிர்காலத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக நாம் எமது எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திட்டமிட வேண்டும். நீண்ட கால மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுத்து அதை அடைவதற்காக கடினமாக உழைக்க வேண்டும். தெளிவான இலக்கோடும் அந்த இலக்கை அடைய வேண்டும் என்று இலட்சியத்தோடும் தன்னம்பிக்கையோடும் அவதானத்தோடும் முழு மூச்சாக முயற்சிக்க வேண்டும்.

முதலாவது வகை வாழ்க்கை பாதையின்றிப் பயணிப்பதைப் போன்றது. இரண்டாவது வகை வாழ்க்கையைத் தெரிவு செய்பவர் தான் வகுத்த பாதையில் பயணிக்கிறார். அவர் அப்பாதையில் பயணிப்பதற்குத் தயார் நிலையிலும் தனது பாதை எங்கு செல்கிறது என்பது குறித்து எப்போதும் விழிப்புணர்வுடனும் இருப்பார்.

எனவே குறிக்கோளை வரையறுத்து அதை நோக்கிப் பயணிப்பதே வெற்றிகரமான வாழ்க் கைக்கும் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் வழிவ குக்கும். இவ்வாறு குறிக்கோளை வகுக்கும்போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். (தொடரும்...)

### தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த இதழில் "அன்றாட வாழ்வில் அரபு மொழி" எனும் பகுதியில்

| | | |
|---|---|---|
| (جَمَلٌ) |  | ماهَذهِ؟ |
| (رُمْحٌ) |  | ماهَذهِ؟ |

என அச்சிடப்பட்டுள்ளது. ماهَذهِ؟ என்பது مَاهَذَا؟ என்று வரவேண்டும் என்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: நஸ்ரா நிஸாம்தீன்
B.A (Hons) PGDE
பு/ கொத்தாந்தீவு மு.ம.வி

○ **மாணவர்களே! எழுத்தியலில் சிறு சிறு பகுதிகளின் அடிப்படை வினாக்கள் இவை. இவற்றை மீட்டிக் கற்று பயன்பெறுங்கள்.**

1. சுட்டெழுத்துக்கள் எவை?

- ✸ அ
- ✸ இ
- ✸ உ

2. சுட்டு எத்தனை வகைப்படும். அவை யாவை?

இரண்டு வகை :

அகச்சுட்டு — புறச்சுட்டு

3. அகச்சுட்டுக்கு எடுத்துக்காட்டு தருக.

| சுட்டெழுத்துக்கள் | அகச்சுட்டு (எ-டு) |
|---|---|
| அ → | அது |
| இ → | இது |
| உ → | உது |

4. புறச்சுட்டுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

| சுட்டெழுத்துக்கள் | புறச்சுட்டு (எ-டு) |
|---|---|
| அ → | அம் மனிதன் |
| இ → | இப் பெண் |
| உ → | உவ் வீடு |

5. அகச்சுட்டு, புறச்சுட்டு என்பவற்றை எவ்வாறு இனங்காண்பீர்?

அகச்சுட்டு, புறச்சுட்டு இரண்டிலும் சுட்டெழுத்துக்களான அ, இ, உ என்பன வரும்.

மேலும்

> அகச்சுட்டு, சொல்லின் அகத்தே நின்று சுட்டுப் பொருளை உணர்த்தும்.

> புறச்சுட்டு, சொற்களுக்கு வெளியே நின்று சுட்டுப் பொருளை உணர்த்தும்.

6. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் எத்தனை? அவற்றினை வகைப்படுத்திக் காட்டுக.

✸ *247*

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | 12 | = 247 |
| மெய் எழுத்துக்கள் | 18 | |
| உயிர்மெய் எழுத்துக்கள் | 216 | |
| ஆய்தம் | 01 | |

7. முதல் எழுத்துக்கள் எவை?

✸ உயிர் 12 + மெய் 18 → 30 முதலெழுத்துக்கள்

8. உயிர் குறில், உயிர் நெடில் என்பது யாது?

✸ உயிர் எழுத்துக்கள் 12இல் குறுகிய ஓசை கொண்டவை உயிர் குறில் அல்லது குற்றெழுத்து எனப்படும். அஃதே, நீண்ட ஓசை கொண்டவை உயிர் நெடில் அல்லது நெட்டெழுத்து எனப்படும்.

(எ-கா):

உயிர் எழுத்துக்கள்
12
(5 + 7)

குறில் (5): அ, இ, உ, எ, ஒ

நெடில் (7): ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சந்தியக்கரம் அல்லது கூட்டுயிர் எனப்படும் எழுத்துக்கள் எவை?

* ஐ, ஔ

10. வினா எழுத்துக்கள் எவை?

* எ, யா, ஆ, ஓ, ஏ

11. மொழிக்கு முதலில் வந்து வினாப் பொருளை உணர்த்தும் வினாவெழுத்துக்கள் எவை?

எ ⟶ எம் மனிதன்?
யா ⟶ யார்?
ஏ ⟶ ஏன்?

12. மொழிக்கு இறுதியில் நின்று வினாப் பொருளை உணர்த்தும் வினாவெழுத்துக்கள் எவை? எடுத்துக்காட்டு தருக.

ஆ ⟶ அவனா?
ஓ ⟶ கவிஞனோ?

13. மொழிக்கு முன்னும் பின்னும் நின்று வினாப் பொருளை உணர்த்தும் வினாவெழுத்துக் கள் எவை? எடுத்துக்காட்டு தருக.

ஏ ⟶ ஏன் (வினாவெழுத்து 'ஏ' மொழிக்கு முதலில் நிற்கிறது.)

அவனே? (வினாவெழுத்து 'ஏ' மொழிக்கு இறுதியில் நிற்கிறது.)

14. மெய் எழுத்துக்கள் எத்தனை வகை? அவை யாவை?

* 3 வகை

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| க் | ங் | ய் |
| ச் | ஞ் | ர் |
| ட் | ண் | ல் |
| த் | ந் | வ் |
| ப் | ம் | ழ் |
| ற் | ன் | ள் |
| 6 | 6 | 6 |

3 X 6 =18 எழுத்துக்கள்

15. வல்லினத்தின் இன எழுத்து வகை எது?

* மெல்லினம்

16. இடையினத்துக்கு இனவெழுத்து உண்டா?

* இல்லை

17. கிரந்த எழுத்துக்கள் எவை?

* ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ, க்ஷ

18. உயிர் எழுத்தின் இன எழுத்துக்கள் எவை?

| | |
|---|---|
| அ - ஆ | இ - ஈ |
| உ - ஊ | எ - ஏ |
| ஒ - ஓ | ஐ - இ |
| ஔ - உ | |

## முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்வு

முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ரபீஉல் அவ்வல், பிறை 9ம் நாள் திங்கட்கிழமை அதிகாலையில் (கி.பி 571 ஏப்ரல், 20 அல்லது 22) அப்துல்லாஹ்வுக்கும் ஆமினாவுக்கும் மகனாகப் பிறந்தார்கள். இவர்களின் பரம்பரை இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகன் இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடன் தொடர்புபடுகின்றது. முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் குலத்தின் பெயர் குறைஷ் ஆகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் முன்மாதிரியாகவே நடந்து கொண்டார்கள். தனது செவிலித் தாய்க்கு மரியாதை செய்தார்கள். அவர்களுடன் நன்றியுணர்வுடன் நடந்து கொண்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் என்ற வகையில் ஒரு தூதருக்கு இருக்க வேண்டிய எல்லாப் பண்புகளும் இவரிடம் காணப்பட்டன. அல்லாஹ் மீது அவர் கொண்ட விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் உறுதியாக நின்றார்கள். அல்லாஹ்வின் தூதை எத்திவைத்த வேளையில் அந்தத் தூதை ஏற்றுக் கொண்ட மக்களை நெறிப்படுத்துவதில் எடுத்த நடவடிக்கைகள் கையாண்ட வழிமுறைகள் மிகச் சாதுரியமானதாகும். எனவே, முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நற்குணங்களைப் பின்பற்றி சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாக வாழ்வோமாக!

எம். வசீமா, தரம்-08
கிரி/மெத்தேகெட்டிய முஸ்லிம் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் 6, 7, 8

ஏ.எல்.ஏ. நிஸார் (Maths Trained) B.A Hons, Dip in Edu
ஆசிரியர், கிரி/மெத்தேகெடிய முஸ்லிம் வித்தியாலயம், கெகுணகொல்ல

## இயற்கை எண்கள்


- எண்ணுவதற்கு உபயோகிக்கப்படும் எண்கள் இயற்கை எண்கள் ஆகும்.

உதாரணம்: 1,2,3,4,5...

- பொதுவாக இவ்வியற்கை எண்களைப் பின்வருமாறு வலயங்களாகக் காட்ட முடியும்.

| பில்லியன் வலயம் | | | மில்லியன் வலயம் | | | ஆயிரம் வலயம் | | | அலகு வலயம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நூறு பில்லியன் | பத்து பில்லியன் | பில்லியன் | நூறு மில்லியன் | பத்து மில்லியன் | மில்லியன் | நூறாயிரம் | பத்தாயிரம் | ஆயிரம் | நூறு | பத்து | ஒன்று |

- 2,7,4,8 ஆகிய எண்களால் ஆக்கக் கூடிய
  - மிகச் சிறிய எண் - 2478
  - மிகப் பெரிய எண் - 8742
- 5247ல் இலக்கங்கள் குறிக்கும் பெறுமானங்கள்
  - 5- ஐயாயிரம்
  - 2- இருநூறு
  - 4- நாற்பது
  - 7- ஏழு




எண்களை எண் சட்டத்தில் பின்வருமாறு காட்டலாம்.

◆ எண்களின் வகைகள்

### ○ ஒற்றை எண்கள்

இரண்டால் வகுக்கும் போது 1 மிகுதியாக வருவது ஒற்றை எண்கள் ஆகும்.

உதாரணம்: 1,3,5,7,9...

ஒற்றை எண்களின் பொது உறுப்பு (2n-1)

உதாரணம்:

i. 20வது ஒற்றை எண்

$2n-1$
$=2 \times 20 - 1$
$=40 - 1$
$=39$

ii. 49 எத்தனையாவது ஒற்றை எண்?

$2n-1 = 49$
$2n = 49 + 1$
$2n = 50$
$n = 50/2$
$n = 25$

### ○ இரட்டை எண்கள்

இரண்டால் வகுக்கும் போது பூச்சியம் மிகுதியாக வருவது இரட்டை எண்கள் ஆகும்.

உதாரணம்: 2,4,6,8,10...

இரட்டை எண்களின் பொது உறுப்பு (2 n)

உதாரணம்:

i. 13 ஆவது இரட்டை எண்

$2n$
$= 2 \times 13$
$= 26$


ii. 40 எத்தனையாவது இரட்டை எண்?

$2n = 40$
$n = 40/2$
$n = 20$

### ○ முக்கோண எண்கள்

குறித்த எண் முக்கோணத்தை அமைக்குமாயின் அது முக்கோண எண் ஆகும்.

உதாரணம்:




முக்கோண எண்ணின் பொது உறுப்பு $\left[\frac{n(n+1)}{2}\right]$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்

i. 10 ஆவது முக்கோண எண்

$$= \frac{n(n+1)}{2}$$

$$= \frac{10(10+1)}{2}$$


$$= \frac{10^5 \times 11}{2} = 55$$

### ❍ சதுர எண்கள்

குறித்த எண் சதுரத்தை அமைக்குமாயின் அது சதுர எண் ஆகும்.

அதாவது, ஒரே எண்ணை இருமுறை பெருக்குவதனால் இவ் எண்ணைப் பெற முடியும்.

உதாரணம்:



(1x1) (2x2) (3x3) (4x4)

சதுர எண்ணின் பொது உறுப்பு ($n^2$)

உதாரணம்: 10வது சதுர எண்

$n^2$

$=10^2$

$=100$

### ❍ முதன்மை எண்கள்

ஏதேனும் இரு வேறு காரணிகளை மட்டும் உடைய எண்கள் முதன்மை எண்கள் ஆகும்.

உதாரணம்: 3= 1x3

7= 1x7

11= 1x11

13= 1x13

### ❍ காரணிகள்

ஓர் எண்ணைப் பிரிக்கும் எண்கள் அனைத்தும் அதன் காரணிகள் ஆகும்.

உதாரணம்: 10 = 1, 2, 5, 10

24 = 1, 2, 3, 4, 5, 6, 8, 12, 24

### ❍ மடங்குகள்

5 இன் மடங்குகள்: 5, 10, 15, 20, 25...

3 இன் மடங்குகள்: 3, 6, 9, 12, 15...

### ❍ எண்களை முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுதல்

10 =2x5

```
2|10
 |___
   5
```

$24 = 2^3 \times 3$

```
2|24
 |____
  2|12
   |____
    2|6
     |___
       3
```

30 = 2 x 3 x 5

```
2|30
 |____
  3|15
   |____
      5
```

$100 = 2^2 \times 5^2$

```
2|100
 |____
  2|50
   |____
    5|25
     |____
        5
```

❍ பொது மடங்குகளில் சிறியது (பொ.ம.சி)

5,2 என்பவற்றின் பொது மடங்கு

10, 20, 30, 40, 50...

பொ.ம.சி: 10

1, 2, 3, 4 என்பவற்றின் மடங்குகள்:

1 - 1, 2, 3, 4, 5, 6...

2 - 2, 4, 6, 8, 10...

3 - 3, 6, 9, 12, 15...

4 - 4, 8, 12, 16, 20...

பொது மடங்கு:

12, 24, 36

பொ.ம.சி = 12

முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுது வதன் மூலம் பொ.ம.சி, பொ.சி.பெ காணல்

30 = 2 x 3 x 5

$45 = 3^2 \times 5$

$120 = 2^3 \times 3 \times 5$

பொ.ம.சி $= 3^2 \times 2^3 \times 5$

= 9 x 8 x 5

= 360

பொ.சி.பெ = 3 x 5

= 15

வகுத்தல் முறை மூலம் பொ.ம.சி, பொ.சி.பெ காணல்

40, 50, 200

```
(2)|40,50,200
 2 |20,25,100
 2 |10,25,50
(5)|5,25,25
 5 |1,5,5
    1,1,1
```

பொ.ம.சி $= 2^3 \times 5^2$

= 8 x 25

= 200

பொ. சி. பெ = 2 x 5

= 10

(மூன்று எண்களையும் மீதி யின்றிப் பிரிப்பவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லா நினோவும்




# காலநிலை மாற்றமும்

**ஜே.எம். அஸீம்**

கடந்த மாதம் இலங்கையில் மட்டு மல்லாது பிரேஸில், அவுஸ்தி ரேலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பாரிய வெள் ளம் அந்நாடுகளில் பாரிய மனித அழிவுகளையும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்தியிருந்ததை நாமறிவோம்.

ஸ்பானிய மொழியில் 'எல் நினோ' (El nino) என்றால் 'சிறு பையன்' (The boy) என்றும் 'லா நினோ' (La nino) என்றால் 'சிறு பெண்' (The girl) என்றும் பொருள்படும். எல் நினோ வெப்ப நீரோட்டத்தையும் லா நினோ குளிர் நீரோட்டத் தையும் குறிக்கும். எல் நினோவின் எதிர்ப்பதமாக லா நினோ கருதப்படுகின்றது.

பூமியின் தோற்றம் முதலே அதன் வளிமண்ட லத்தின் வாயுக்கள் அதன் கட்டமைப்பு என்பன மாற்றங்களுக்குட்பட்டே வந்துள்ளது. கால நிலையைத் தோற்றுவிக்கும் பிரதான காரணி களுள் ஒன்றான வளிமண்டல மாற்றமானது காலநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியே வந்துள்ளது. இம்மாற்றமானது இயற்கையான முறையில் படிப்படியாக நிகழ்ந்துள்ளது.

வசந்த காலம், கோடை காலம், இலையுதிர் காலம், மாரி காலம் என்பன குறித்த ஒழுங்கில் நிகழ்வது இயற்கையானது. இவை ஒவ்வொரு வருடமும் குறித்த கால இடைவெளியில் பிரதேச வேறுபாடுகளுக்கு ஏற்ப நிகழும். இது பிரதி வருடமும் ஏற்படுவதைப் போன்றே எல் நினோவும் 2-7 வருட கால இடைவெளியில் உருவாகி 2-3 வருடங்கள் நிலை பெற்று காலநிலையில் பல்வேறு மாற்றங்களைத் தோற்று விக்கும்.

**எல் நினோ**

குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் காணப்படும் கடல் நீர் வெப்பநிலையானது வழமைக்கு மாற்றமாக அதிகரித்து அது 2-3 வருடங்கள் நிலைபெற்றால் அதனை நாம் 'எல் நினோ' என அழைப்போம். குளிரான கடல் நீரோட்டம் தென் அமெரிக்க மேற்குக் கரையை அண்டி வடக்கு நோக்கிச் சென்று மத்திய கோட்டை அடைந்ததும் பசுபிக் கடலை ஊடறுத்து மேற்காக திரும்பி விடுவது சாதாரண நிகழ்வாகும்.

அதாவது சிலி, பெரு, ஈக்குவடோர் போன்ற தென்னமெரிக்க நாடுகள் சார்ந்த பசுபிக் சமுத்திரப் பகுதியிலிருந்து மேற்காக மத்திய கோட்டை நோக்கி வீசும் வியாபாரக் காற்றானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு சாதாரணமாக நிலவும் சாதாரண வெப்ப நீரினை பசுபிக்கின் மேற்குக் கரை நாடுகளான அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளின் கரையோரங்களுக்கு நகர்த்தி விடும்.

இதனால் சாதாரண காலநிலை நிலவும் காலப் பகுதியில் பசுபிக்கின் கிழக்குக் கரை நாடுகளான பெரு, சிலி போன்றவற்றில் குளிர்ச்சியான நிலைமை காணப்படும். இதே காலப்பகுதியில் பசுபிக்கின் மேற்குக் கரையோர நாடுகளான அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, இந்தோனேசியாவில் வெப்பமான நிலைமை காணப்படும்.

இதனால்தான் ஒரே காலப் பகுதியில் ஒரே அகலக்கோட்டு நாடுகளில் வழமைக்கு மாறான காலநிலை ஒரே விதமாக அல்லாமல் வேறுபட்ட விதமாக நிகழ்கிறது உதாரணம்:

ஒரே அகலக்கோட்டில் காணப்படும் நாடுகளான இந்தியா, மலேசியா, இந்தோனேசியாவில் கடுமையான வெப்பம், பங்களாதேஷில் வெள்ளம், ஐரோப்பாவில் கடும் குளிருடன் கூடிய பனிப் புயல், தென்னாபிரிக்க நாடுகளில் அகோர வெப்பம், அவுஸ்திரேலியாவில் கடும் வெப்பத்துடன் கூடிய காட்டுத்தீ, கிழக்கு பசுபிக் நாடுகளில் சூறாவளி என்பன ஏற்பட்டன.

**லா நினோ (குளிர் நீரோட்டம்)**

பசுபிக் கடல் வெப்ப நிலையில் இருந்து குளிர் நிலையை அடைவதுதான் லா நினோ. இதன் காரணமாக பசுபிக்கடல் மற்றும் அதனைச் சூழ உள்ள இடங்களில் இதன் ஆதிக்கம் அதிகரிப்பதால் பசுபிக் கடலின் கிழக்குப் பகுதியில் வழமைக்கு மாற்றமான குளிர் நிலைமை ஏற்படும்.

மேற்கத்தேய பசுபிக் பகுதியில் மித வெப்பமும் அதிக ஈரப்பதனும் அதிக மழைவீழ்ச்சியையும் கொண்டிருக்கும். இது எல் நினோவைத் தொடர்ந்து வரும். ஆனால் எப்போதும் எல் நினோவைத் தொடர்ந்து வரும் என்று கூற முடியாது.

இந்த லா நினோ நிலைமையே அண்மையில் இலங்கையில் நிலவிய கடும் குளிருக்குக் காரணம் ஆகும்.

ஆனால் அதிகரித்த மழைவீழ்ச்சி, வெள்ளம், மண்சரிவு என்பவற்றிற்கான காரணங்கள் வேறு:

1. வடகீழ் பருவக் காற்று
2. வளிமண்டலத்தில் நிலவும் வழமையான ஒழுங்கிற்கு மாறான ஒழுங்கற்ற நிலை
3. அயனக் குழப்பங்கள் (இடையூறுகள்)
4. காலநிலை மாற்றம்

1. வடகீழ் பருவக் காற்று

பருவப் பெயர்ச்சிக் காற்றுக்கள் மூலமே இலங்கைக்கு மழை கிடைக்கிறது. இப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்கள் 03 வகைப்படும்.

i. தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று (மே-செப்டம்பர்)

ii. வட கீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று (நவம்பர் இறுதி-பெப்ரவரி)

iii. இடைப் பருவப் பெயர்ச்சிக் காற்று (மார்ச், ஏப்ரல் மற்றும் ஒக்டோபர், நவம்பர்)

**இலங்கையின் காலநிலை மாற்றத்திற்குக் காரணம் லா-நினோ**

குறிப்பாக ஒரு நாட்டின் காலநிலையினைத் தீர்மானிப்பதில் கடலின் அண்மை, சேய்மை, வெப்ப நீரோட்டங்கள் என்பனவும் ஏனைய பல காரணங்களுடன் முக்கியம் பெறுகின்றன.

இலங்கைத் தீவானது உலக சமுத்திரப் பரப்புக்களுடன் ஒப்பிடும்போது கிழக்கு மேற்காக சிறியளவு தூரத்தைக் கொண்ட ஒரு நாடாகும். இந்த வகையில்,

1. லா-நினா காரணமாக சமுத்திர நீர் தூர இடங்களில் குளிர்ச்சியடைந்தாலும் இதன் செல்வாக்கு இலங்கையில் இருக்கும்.
2. உலக ரீதியில் தொடர்ந்தும் அதிக குளிர்ச்சியை அனுபவித்து வரும் சைபீரியப் பகுதியிலிருந்தான அதிகுளிர் காற்றுக்களின் செல்வாக்கிற்கு உட்படக் கூடிய வாய்ப்புக்கள் இலங்கைக்கு அதிகம் காணப்படுவதனால் தொடர்ச்சியான குளிர்ச் சுவாத்தியமும் பனி மூட்டத்துடன் கூடிய நிலையும் உள்வாங்கப்படுள்ள ஒரு நிலையில் இலங்கை காணப்படுகின்றது என பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் எம்.ஏ.எம். இஸ்திகார் குறிப்பிட்டுள்ளார்.


(31ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்க அகரம்



மாதம் ஒருமுறை எம் கையிலே
மலரும் அகரமே வாழ்க
அறிவு ஊற்றில் நம்மை
ஆழ்த்தும் அகரமே வாழ்க

போட்டிகள் தந்து எம்மை
உற்சாகப்படுத்தும் அகரமே
வாழ்க
மாணவர் எம் திறமைக்கு
களம் அமைத்த அகரமே
நீ நீடூழி வாழ்க

***எம்.என்.யூ. நஸீமா***
***குளி/ மடிகே அனுக்கண மு.ம.வி***
***சுனந்தபுர***

# அகரம் ஓர் அறிவுச் சுடர்





அகரமே!
நான் தினமும் உன் நினைவில்
என் அறிவு உன் மடியில்
விழி திறக்கும் உன் வருகையால்
ஒளி கிடைக்கும் உன் அறிவால்

அகரமே!
நீ என் உள்ளத்தில்
மாதத்தின் ஆரம் உன் நினைவுகள்
உன் தாமதம் என் விழிகளில் ஈரம்
உன் வருகையால் ஒளி பிறக்கும்
என் பாடசாலையில்





***ஏ.என்.எப். நிப்லா***
***தும்மோதர மு.வி***

# களைந்திடு ஜாஹிலிய்யத்



நண்பிகளே!
வீண் அனாச்சாரங்களை
கலாசாரங்களாய் எண்ணி
புதைகுழிக்குள் வீழ்வது
ஏனோ...?

'ஹிஜாப்'
உங்கள் சுதந்திரத்தைப்
பறிப்பதாய்
அச்சமின்றிச்
சொல்கிறீர்கள்!
அந்த ஹிஜாப் தான்
எங்கள் மானம் காக்கும்
அணிகலன் என்பது
அறியாமல்...!

அஜ்னபி ஆண்களோடு
மஹ்ரமி போல் பழகும்
உங்கள் அறியாமை
ஜாஹிலிய்யத்தை
நினைவூட்டுகின்றது!

ஆண்கள் போடும்
வீண் பகிடிகளுக்கு
எண்ணெய் வார்க்கும்
உங்கள் இழிநிலை
எண்ணி
மனம் வெதும்புகிறது!

நேற்றைய தொடர்
நாடகத்தின்
ஜாஹிலிய்ய மீட்டுக்களை
வகுப்பில் அசைபோடும்
உங்கள் எண்ணங்களை
மாற்ற முடியாதா...?

என் தோழிகளே!
வகுப்பறை
ஒழுக்கத்தால் உயரணுமே
தவிர அது
கேளிக்கைக் கூடமாய்
மலிந்திடக் கூடாதே!



***அய்மா நிஃமத்துல்லாஹ்***
***கமு/ அல்ஹம்றா வித்தியாலயம்***
***மருதமுனை***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்
(ஆசிரியர்கள்: பு/ ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை)



**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

**கீழ்வரும் உருக்களில் ஒன்று மட்டும் வித்தியாசமானது. அதன் கீழ் கீறிடுக.**

1. i. ii. iii.

2. i. ii. iii.

**மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

3. அதிகம் புரதச்சத்துள்ள பழம் எது?
   i. விளாம்பழம் ii. மாதுளம்பழம்
   iii. நாவல்பழம்

4. பின்வரும் உணவுகளுள் கலப்புணவு எது?
   i. மீன் ii. பால் iii. பாண்

5. பின்வருவனவற்றுள் எது ஒரு ஊனுண்ணியாகும்?
   i. காகம் ii. முயல் iii. அணில்

6. உணவைக் கிழித்து உண்பதற்கு ஏற்ற அலகுகளைக் கொண்ட பறவை எது?
   i. பருந்து ii. புறா iii. மீன் கொத்தி

7. பின்வரும் பூக்களில் எது ஊதா நிறப் பூவாகும்?
   i. எருக்கலைப்பூ ii. முல்லைப்பூ
   iii. வாழைப்பூ

8. பின்வரும் பூக்களில் தேனைக் கொண்டிராத பூ எது?
   i. வாழைப்பூ ii. முருங்கைப்பூ
   iii. கடதாசிப்பூ

9. பௌத்தர்கள் விருந்தினர்களை வரவேற்கும் போது கொடுப்பது
   i. வெற்றிலை ii. பூக்கள் iii. பாற்சோறு

10. பாடசாலைக்கு அதிபர் பொறுப்பாக இருப்பது போல வங்கிக்கு பொறுப்பாக இருப்பவர் யார்?
   i. தலைவர் ii. ஆணையாளர்
   iii. முகாமையாளர்

**எண்கோலங்களை அவதானித்து அடுத்து வரும் எண்களை எழுதுக.**

11. 4070, 4080, 4090, ........, ........

12. 9015, 9010, 9005, ........, ........

13. தனிநபர் விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று எது?
   i. உதைப் பந்தாட்டம் ii. குத்துச் சண்டை
   iii. 100 மீற்றர் ஓட்டம்

14. உதைப் பந்தாட்டப் போட்டியில் ஒரு குழுவில் விளையாடும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
   i. 11 பேர் ii. 15 பேர் iii. 6 பேர்

15. பாதசாரிகள் மஞ்சள் கோட்டினால் பாதையைக் கடக்கும் போது முதலில் கவனிக்க வேண்டியது.
   i. வலது பக்கம் ii. இடது பக்கம்
   iii. இரண்டு பக்கமும்

16. **கீழ்வரும் இலட்சினையின் குறியீட்டின் கருத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.**
   i. இலங்கை நீர்வடிகால் சபை
   ii. பெற்றோலிய கூட்டுத்தாபனம்
   iii. மகாவலி நிலையம்



**பின்வரும் கூற்றுக்களை வாசித்தறிந்து சரியான விடைக்குக் கோடிடுக.**

17. "உடலில் ஓர் அவயமாவேன். சகலதையும் கண்டறிவேன். இமைக்குள் மறைந்து கொள்வேன்."
   i. நா ii. விழி iii. செவி

18. "பகலில் உச்சம் கொடுப்பேன். இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கிடுவேன். பிரமாண்டமான அக்கினி நானாவேன்."

i. நெருப்பு ii. சந்திரன் iii. சூரியன்

19. "தலைகீழாய்த் தொங்கிடுவேன். பறவைகளில் முலையூட்டியும் நானாவேன்."

i. ஆந்தை ii. வௌவால் iii. சிட்டு

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.

20. වැස්ස .................. 21. වතුර ..................

பின்வரும் வாக்கியங்களுள் நிகழ்கால பன்மை வாக்கியங்களைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

22. i. டோனி மூன்றாம் தரத்தில் படிக்கின்றான்.
ii. கோணேஸ்வர வித்தியாலய மாணவர்கள் சுற்றுலா செல்கின்றனர்.
iii. அவர்கள் நாளை கூடிப் பேசுவார்கள்.
(....................)

23. i. அவை உணவு தேடி அலைகின்றன.
ii. புலிகள் காட்டில் வாழ்ந்தன.
iii. நீங்கள் பரீட்சையில் சித்தி அடைவீர்கள்.
(....................)

24. அணில் முக்கனிகளுள் ஒன்றைக் கடித்தது. இதில் முக்கனிகளுள் ஒன்று

i. அப்பிள் ii. பலா iii. தோடை

25. வாசு தனது நிறுவனத்தின் வெள்ளி விழாவை கொண்டாடினான். இதில் வெள்ளி விழா என்பது

i. 25வது நிறைவாண்டைக் கொண்டாடும் விழா
ii. 50வது நிறைவாண்டைக் கொண்டாடும் விழா
iii. 75வது நிறைவாண்டைக் கொண்டாடும் விழா

26. சேவல் ...............டன் இரை தேடிச் சென்றது.

i. மந்தி ii. பேடு iii. கடுவனுடன்

ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

27. Shop .................. 28. Air port ..................

29. உயர்திணை பன்மை வினைச்சொல் ஒன்று

i. ஓடினான் ii. வருகின்றாய் iii. பாடினோம்


30. முன்னிலை ஒருமை அஃறிணைச் சொல்

i. அது ii. அவை iii. புலிகள்


பின்வரும் சொற்களுக்குப் பன்மைச் சொற்களைத் தருக.

31. பல் .......... 32. முள் ........... 33. புத்தகம் ...........

கீழ்காணும் மூன்று படங்களுள் ஒன்று வித்தியாசமான கருத்தை தரக்கூடியது. அதன் கீழ்க் கோடிடுக.



34. i. ii. iii.



35. i. ii. iii.

இங்கு தரப்பட்டுள்ள விலைச்சுட்டியை அவதானித்து வினாக்களுக்கு விடையளியுங்கள். தரப்பட்ட அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | அளவு | ரூபா சதம் |
|---|---|---|
| 1kg | மா | 60.00 |
| 500g | சீனி | 60.00 |
| 250g | அரிசி | 25.00 |
| 1kg | தேயிலை | 220.00 |

| பொருள் | அளவு | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 500g | தேயிலை | ....... | ...... |
| 1kg | சீனி | ....... | ....... |
| 1kg | அரிசி | ....... | ....... |
| 250g | மா | ....... | ....... |
| மொத்த விலை | | ....... | ....... |

36. 132இன் குவியலை எத்தனை 4இன் குவியல்களாக வகுக்கலாம்?

i. 41 ii. 22 iii. 33

37. பின்வரும் எண்களை இறங்குவரிசைப்படி எழுதினால் கடைசியாக வரும் எண் எது?

7010, 7001, 7011, 7110

i. 7110 ii. 7010 iii. 7001

38. நத்தார் இடம்பெறும் மாதம் எது?

i. ஜனவரி ii. டிசம்பர் iii. ஏப்ரல்

39. பின்வருவனவற்றுள் அளவில் மிகச் சிறிய வித்து

i. பயறு ii. கடுகு iii. பப்பாசி

40. வெற்றிலையின் வடிவத்தையுடைய மிகச் சிறிய வித்து இலை எது?

i. மா ii. மரவள்ளி iii. திப்பிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

ஆசிரியர்: எஸ்.ஐ.எல். முஸம்மில். எம்.எம். முபாரக்


**வினாப்பத்திரம் II**

**நேரம் 1 மணி 15 நிமிடம்**

புத்தகசாலை ஒன்றில் நான்கு நாட்கள் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| நாள் | கணிதம் | தமிழ் | சமயம் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| திங்கள் | 74 | 60 | 60 | 60 |
| செவ்வாய் | 54 | 70 | 64 | 72 |
| புதன் | 60 | 56 | 68 | 70 |
| வியாழன் | 88 | 82 | 70 | 65 |

1. திங்கட்கிழமை அதிகமாக விற்கப்பட்ட புத்தகம் எது? ..............................................
2. வியாழக்கிழமை விற்கப்பட்ட மொத்தப் புத்தகங்கள் எத்தனை? ................................
3. நான்கு நாட்களிலும் விற்கப்பட்ட கணிதப் புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?.......................................................
4. புத்தகமொன்றை வியாபாரி ஒருவர் 40 ரூபாவிற்கு வாங்கி 65 ரூபாவிற்கு விற்றார். அவருக்கு கிடைக்கும் இலாபம் எவ்வளவு? ..............................................
5. என்னிடம் ரூபா 75 உண்டு. எனது அண்ணனிடம் உள்ள பணம் என்னிடம் உள்ள பணத்தின் 3 மடங்காகும். எனது அண்ணனிடம் உள்ள பணம் எவ்வளவு? .......................................................
6. இவ்வுருவில் அதிகமாக இருப்பது



i. சதுரங்கள் ii. முக்கோணங்கள்
iii. நீள்சதுரங்கள்

**பின்வரும் சொற்களுக்கு எதிர்கருத்து தருக.**

7. கஞ்சன்...... 8. நாகரிகம் ....... 9. கோழை.....

**சரியான விடைக்குக் கோடிடுக**

10. i. மரத்தில் குயில்கள் கூடுகட்டி வாழ்ந்தன.
ii. யானை புள்ளிமானை அடித்துக் கொன்று தின்றது.
iii. ஒருவர் பிறருக்கு கொடுக்கக் கொடுக்கக் கூடும் செல்வம் கல்வியாகும்.

11. i. ரைட் சகோதரர்கள் தங்களது விமானத்திற்கு வைத்த பெயர் கிட்.
ii. மின்குமிழை எடிசன் கண்டுபிடித்தார்.
iii. பாடசாலை ஒன்றில் உப அதிபர் உயர்ந்த பதவியில் உள்ளவர்.

12. i. மேற்கில் உதிக்கும் சூரியன் கிழக்கில் மறையும்.
ii. கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் மறையும்.
iii. கிழக்கில் உதிக்கும் சூரியன் தெற்கில் மறையும்.

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

13. VEGETABLE ..............................................
14. GRADE ..................................................

**பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.**

15. தன்-அமுது-வேளையில்-தாய்-ஊட்டினாள்-குழந்தைக்கு பால்........................................
16. எம்மை-நாம்-அண்டாது-வாழ்ந்தால்-நோய்-சுத்தமாக. ........................................

**பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.**

17. කවුද .................. 18. වත්ත ......................



19. i. இலங்கை மின்சார சபை
ii. இலங்கை மரக் கூட்டுத்தாபனம்
iii. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



20. i. நச்சுத் தன்மையானது
ii. பாதுகாப்பாக வைக்கவும்
iii. ஆபத்தானது

**பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அ. மா மரத்தில் ஒரு கிள்ளை
அது மாலை இட்ட கிள்ளை
விரும்பி உண்ணுது மா
பழகினால் பாடும் பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஆ. கத்திக் கத்தியே கெடும்
இரையை நாவினாலே தொடும்
பாம்பை கண்டால் நடுங்கிடும்
பாய்ந்து ஓடி ஒடுங்கிடும்

இ. கருமை நிறத்தில் ஒரு கள்வன்
காலையிலே எழுந்திடுவான் மன்னன்
கரைந்து எழுப்பிடுவான் பித்தன்
கண்டதை கொத்திடுவான் கள்வன்

மேற்குறிப்பிட்ட பாடல்களில் குறிப்பிடப்பட்டவை ஒழுங்குப் பிரகாரம்

21. i. கீரிப்பிள்ளை, தவளை, காகம்
ii. கிளி, தவளை, காகம்
iii. கீரிப்பிள்ளை, உடும்பு, குயில்

22. பாடலில் இடம்பெற்ற முக்கனிகளுள் ஒன்று
..................................................

23. பித்தன் என்பதன் ஒத்த பதம் ......................

24. பாடல் "அ" வில் இடம்பெற்ற ஓர் எழுத்தில் கருத்து தரக்கூடிய சொற்கள் இரண்டு தருக.
i. .......................... ii ..........................

25. பாடல் "ஆ" வில் இடம்பெற்ற சினைப் பெயர் ஒன்றைத் தருக. ..............................

26. காலையிலே எழுந்திடுவான் மன்னன் என்பதில் எழுவாய் ..................................

27. கள்வன் என்பதற்கான எதிர்ப்பால் சொல்
..................................................

28. பாம்பு என்பதன் ஒத்த பதம்........................

<u>கீழே காணப்படும் சொற்கூட்டங்களில் ஒரு சொற்கூட்டம் பொருத்தமற்றது. அதன் கீழ் கீறிடுக.</u>

29. i. சந்திரன், சூரியன், பூமி
ii. ஆறு, கடல், ஏரி
iii. பூ, காய், பழம்

30. i. கரம், சதுரங்கம், பூப்பந்து
ii. மான், மரை, மிருகம்
iii. கிளி, மைனா, மயில்

31. நத்தார் கொண்டாடப்படும் மாதம் எது?
i. ஜனவரி ii. ஏப்ரல் iii. டிசம்பர்


32. பூக்காத கொடியொன்று
i. வெற்றிலை ii. பூசணி iii. அவரை

33. ஊதா நிறம் கொண்ட பூ எது?
i. எருக்கலைப் பூ ii. முல்லைப் பூ
iii. அலரிப் பூ

34. ஒரு தடவையில் ஒரு குட்டி ஈனும் மிருகம்
i. பூனை ii. குதிரை iii. முயல்

35. வாழைப் பூவை நாடி வரும் பிராணி எது?
i. அணில் ii. வௌவால் iii. கிளி

36. எத்தாவரத்தில் பூ, காய், பழம் போன்ற அனைத்தும் உணவுக்குப் பயன்படும்
i. வாழை ii. பலா iii. பாகல்



37. இவ்வுருவில் எத்தனை கனவுருக்கள் உண்டு?
i. 3 ii. 4 iii. 5

38. அலுமினியத் தகட்டிற்கு அருகில் காந்தத் துண்டினைக் கொண்டு செல்லும்போது
i. பித்தளைத் தகட்டை நோக்கிக் காந்தத் துண்டு இழுக்கப்படும்.
ii. பித்தளைத் தகட்டிலிருந்து காந்தத்துண்டு தள்ளப்படும்.
iii. பித்தளைத் தகட்டுக்கும் காந்தத் துண்டுக்கும் இடையில் மாற்றம் எதுவும் ஏற்பட மாட்டாது.

<u>"அ" பகுதிக்குப் பொருத்தமான விடையை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.</u>

அ

39. ஓடி விளையாடு பாப்பா..............................
40. ஆலயம் தொழுவது சாலவும் நன்று...............
41. ஆனைக்கும் அடி சறுக்கும் .......................
42. திண்மம், திரவம், வாயு...............................
43. திருக்குறள் ..............................................
44. நுங்கு.......................................................

ஆ

திருவள்ளுவர்-நீர்-பாரதியார்-பனை-பழமொழி- கொன்றை வேந்தன்

"எனது இனிய நண்பன் மைக்கல்' என்ற தலைப் பில் 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.


45. ..........................................................
46. ..........................................................
47. ..........................................................
48. ..........................................................
49. ..........................................................
50. ..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்

முஹர்ரம் வாழ்த்து மடல்



எம்.ஏ.எப். அஸ்ஹரா, தரம்=9
மட்/மில்லத் மகளிர் ம.வி.
காத்தான்குடி



பாத்திமா இஸ்ரத், தரம்-10
கு/அல்மனார் தே.பா.
ஹந்தஸ்ஸ




எம்.என். முன்ஸிரா, தரம்-7
பாத்திமா முஸ்லிம் .பா.ம.வி.
ஹந்தஸ்ஸ




எம்.என். சம்ரா நிஸ்தார், தரம்-8
மா/அஜ்மீர் தே.பா.
உக்குவளை


## பாராட்டைப் பெறும் வண்ணங்கள்



எம்.எப்.ஷாஹிமா, தரம்-8
அல் மின்ஹாஜ் தே.பா.
ஹிப்புகஸ்தலாவ



ஏ.ஜே. ஜெஸ்பிர், தரம்-10
தி/கிண்ணியா மத்திய கல்லூரி
கிண்ணியா



எம்.கே.எம். அகீல், தரம்-5
ஸாஹிரா ஆரம்ப பாடசாலை
புத்தளம்




எம்.என்.எப். நிஸ்மா, தரம்-6
பு/பாத்திமா பாலிகா ம.வி.
புத்தளம்




பாத்திமா ரிஹானா, தரம்-11
கு/அல்-சபா ம.வி.
வத்தேகெதர



அமால் மில்ஹான், தரம்-7
அல்ஹுமைசரா தே.பா.
பேருவளை




எஸ். சமீரா , தரம்-9
தி/ஆயிஷா மகளிர் ம.வி.
கந்தளாய்



எம்.ஏ.எம். அர்ஷட் அமீர், தரம்-7
அல்ஹுமைசரா தே.பா.
பேருவளை



எம்.டீ.எம். சிகான், தரம்-6
தி/அல்தாரிக் ம.வி.
கந்தளாய்



இஹ்திஸாம் ஷமாத், தரம்-7
அல-ஹுமைசரா தே.பா.
பேருவளை


அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு **நிவாரணப் பணி**

இறுதித்திகதி 20.02.2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரே, மாணவர்களே! **உங்கள் இல்லங்களை பயனுள்ள வாசிப்பால் பூரணப்படுத்துங்கள்**





இஸ்லாமிய குடும்ப சஞ்சிகை




அரசியல், சமூக விவகார ஏடு





சிங்கள மாத இதழ்





மாதாந்த சிறுவர் சஞ்சிகை

## எமது வெளியீடுகளை வாசியுங்கள்...










# முழுக் குடும்பமும் பயன்பெறுங்கள்!

அல்ஹஸனாத் வெளியீட்டகம்

77, தெமடகொட வீதி, கொழும்பு 00900 தொலைபேசி 0112689324


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org